இந்திய ரிசர்வ் வங்கி
RESERVE BANK OF INDIA

www.rbi.org.in

RBI/DBR/2015-16/18

முதன்மை சுற்றறிக்கை DBR.AML.BC.No.81/14.01.001/2015-16

பிப்ரவரி 25, 2016

(ஆகஸ்டு 09, 2019 அன்று புதுப்பிக்கப்பட்டது)

(மே 29, 2019 அன்று புதுப்பிக்கப்பட்டது)

## முதன்மைவழிகாட்டுதல் - உங்கள்வாடிக்கையாளரை அறிவீர் (KYC) வழிகாட்டுதல், 2016

பணச்சலவை தடுப்புச்சட்டம் 2002, பணச்சலவை தடுப்பு விதிகள் (பதிவேடுகள் பராமரிப்பு) 2005, (அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டது) மற்றும் அரசால் புதுப்பிக்கப்பட்ட ஆதார் மற்றும் இதர சட்ட (திருத்தப்பட்டது) மேலாணை 2019, ஆகியவற்றில் உள்ள ஷரத்துக்களின் படி கீழே குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் பின்பற்றுவது அவசியமாகும். ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள், தங்களிடம் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்களுடன் அந்த கணக்குகளின் அடிப்படையிலோ அல்லது வேறுவிதமாகவோ பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது அவர்களின் அடையாளங்களை அறிந்துகொள்ளவும், கண்காணிக்கவும், சில நடைமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மேலும் அவற்றைத் தொடர்ந்து வெளியிடப்படும் செயல்பாட்டு அறிவுறுத்தல்கள், திருத்தங்கள் ஆகியவற்றை, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

2. அதன்படி, வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949-ன் சட்டப்பிரிவு 35A (மற்றும் வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம், பணச்சலவை (பதிவேடுகள் பராமரிப்பு) தடுப்பு விதிகள் 2005-ன் விதி 9 (14) உடன் சேர்த்துப்படிக்க) மற்றும் இதர சட்டங்களில் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பிரயோகிக்கும் விதமாக, இந்திய ரிசர்வ் வங்கிக்கு ஏதுவாக அமைந்த விதத்தில், பொது மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, இது தேவை என்பதில் திருப்தியடைந்து, இந்திய ரிசர்வ் வங்கி பின்வரும் வழிகாட்டுதல்களை வெளியிடுகிறது.

**அத்தியாயம்-I**
**பூர்வாங்கம்**

## 1. சிறுதலைப்பு மற்றும்தொடக்கம்

a) இந்தவழிகாட்டுதல்கள் இந்தியரிசர்வ்வங்கி (உங்கள்வாடிக்கையாளரைஅறிவீர் (KYC) வழிகாட்டுதல், 2016 என்றுஅழைக்கப்படும்.

b) இந்தியரிசர்வ்வங்கியின்அதிகாரப்பூர்வஇணையதளத்தில்வெளியிடப்பட்டநாளிலிருந்து இந்த வழிகாட்டுதல்கள் அமலாக்கம் செய்யப்படும்.

## 2. பொருந்தும்தன்மை விவரங்கள்

a) இந்தியரிசர்வ்வங்கியால்ஒழுங்குபடுத்தப்படும் ஒவ்வொரு நிறுவனத்திற்கும், முக்கியமாக கீழே கூறப்பட்டுள்ள3 (b) (xiii) இல் விளக்கப்பட்டவற்றிற்கு இந்த வழிகாட்டுதல்கள் பொருந்தும் (குறிப்பாக விலக்கு அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலன்றி).

b) ஒழுங்குபடுத்தப்படும் அமைப்புகளின் அயல்நாடுகளில் உள்ள கிளைகள் மற்றும் பெருவாரியான மூலதனச் சொந்தம் கொண்ட துணை நிறுவனங்களுக்கும், அவை அமைக்கப்பெற்றுள்ள நாடுகளின் விதிகளுக்குப் புறம்பாக இல்லாத வகையில், இந்த வழிகாட்டுதல்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுப் பொருந்தும்.

i. இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதைத் தடுக்கக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிகள் நிலவி வருமானால், அவை இந்திய ரிசர்வ் வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவேண்டும்.

ii. கிளை அலுவலகங்கள் அமையப்பெற்ற நாடுகளில் உள்ள விதிமுறைகளுக்கும், இந்திய ரிசர்வ் வங்கி பரிந்துரைத்துள்ள KYC/AML (உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்/ பணச்சலவை தடுப்புச் சட்டம்) கருத்துகளுக்கும் வேறுபாடுகள் இருக்குமானால், அவற்றுள் கடுமையானவற்றை, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளின் கிளைகள் பின்பற்றவேண்டும்

iii. அயல்நாட்டில் நிறுவப்பட்ட அமைப்புகளின், இந்தியக் கிளைகள், துணை நிறுவனங்கள் அவரவர் நாட்டு விதிகள், இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்கள் இரண்டிலும் உள்ள கடுமையானவற்றைப் பின்பற்றவேண்டும்.

ஆயின், பகுதி 6பிரிவு23-ல் குறிப்பிடப்படும்‘சிறுகணக்குகள்’ வகையினருக்கு இந்த விதி பொருந்தாது.

### 3. வரைவிலக்கணம்

இந்தவழிகாட்டுதல்களைப் பொருத்தவரை, இங்கே கொடுக்கப்பட்ட சொற்றொடர்களின் பொருள் என்பது (சூழலுக்கேற்ப வேறு விதமாக பொருள்கொள்ளத் தேவைப்-பட்டாலன்றி) கீழே குறிப்பிட்ட வகையிலேயே அமைந்திடும்.

a) பணச்சலவை தடுப்புச்சட்டம், 2002 மற்றும்பணச்சலவைத்தடுப்பு (பதிவேடுகளைப் பராமரித்தல்) விதிகள், 2005-ன்படி சொற்றொடர்களுக்கு அளிக்கப்பட்ட பொருள் பின்வருமாறு:

i. ஆதார்மற்றும்இதரசட்டம் (திருத்தப்பட்ட) மேலாணை, 2019-இல்குறிப்பிட்டபடி "ஆதார்எண்" என்பதுஒரு தனி நபருக்கு ஆதார் (நிதியியல் மற்றும்இதர உதவித் தொகை, நிதிப்பலன்கள் சேவைகள் தொடர்பான இலக்கை அடையும் அளிப்புகள்) சட்டம், 2016 (18 of 2016) சட்டப்பிரிவு எண் 3 (3)ல் குறிப்பிட்டபடி அளிக்கப்படும் அடையாள எண் ஆகும். இதன் உபபிரிவு எண் (4) இன்படி தோற்ற நிலையில் அளிக்கப்படும் மாற்றுஎண் ஏதேனும் இருப்பின் அதுவும் ஆதார் எண்ணாகக் கருதப்படும்.

ii. சட்டம், விதிகள் என்பவை முறையே பணச்சலவை தடுப்புச் சட்டம் 2002, பணச்சலவைத் தடுப்பு (பதிவேடுகள் பராமரிப்பு) விதிகள் 2005-ஐ (அவற்றில் செய்யப்படும் திருத்தங்களை) குறிப்பிடுவதாகும்.

iii. ஆதாரைப் பொறுத்தவரை, சட்டப்பூர்வமாக்குதல் என்பது ஆதார் (நிதியியல் மற்றும்இதர உதவித் தொகை, நிதிப்பலன்கள் சேவைகள் தொடர்பான இலக்கை அடையும் அளிப்புகள்) சட்டம், 2016-ன் 2 (c)-ல் விளக்கப்பட்டிருக்கும் ஆதாரைச் சட்டப்பூர்வமாக்கும் செயல்முறையையே குறிக்கும்.

## iv. பயனாளியாகும் உரிமையாளர் (BO)

(a) வாடிக்கையாளர் ஒரு குழுமமாக இருந்தால், பயனாளியாகும் உரிமையாளர் என்பவர் ஒரு மனிதராகவே இருப்பார். தனியாகவோ, பிறருடன் சேர்ந்தோ, ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட தீர்ப்பாய்வுக்குரிய நபராகவோ, கட்டுப்படுத்தும் உரிமை பெற்றவராகவோ, வேறுவகையில் கட்டுப்படுத்தும் அதிகாரம் உடையவராகவோ இருக்கலாம்.

**விளக்கம்:** இந்த உபபிரிவின் நோக்கத்திற்காக –

1. கட்டுப்படுத்தும் உரிமை என்பது மூலதனத்தின் லாபத்தில் சொந்தம் கொண்டாட கம்பெனியின் மூலதனத்தில் 25 சதவிகிதம் பங்குகளை வைத்திருத்தல்.

2. கட்டுப்படுத்தும் அதிகாரம் என்பது கம்பெனியின் நிர்வாக மன்ற இயக்குநர்களில் பெரும்பாலோரை நியமிக்கும் அதிகாரம், அதன் கொள்கை முடிவுகள், மேலாண்மையில் அதிகாரம், கட்டுப்பாடு கொண்டிருத்தல், இது பங்குகளை வைத்திருப்பதால் அல்லது மேலாண்மை உரிமைகளில் பங்குதாரர் ஒப்பந்தங்கள், வோட்டளிக்கும் ஒப்பந்தங்களின் வாயிலாகக் கிடைத்திருக்கலாம்.

(b) வாடிக்கையாளர் ஒரு கூட்டாண்மை நிறுவனமாக இருப்பின், பயனாளி உரிமையாளர் என்பவர் ஒரு மனிதர். இவர் தனியாகவோ கூட்டாகவோ ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட தீர்ப்பாய்வுக்கு உரிய நபராகவோ, நிறுவன மூலதனம் அல்லது லாபத்தில் 15 சதவிகிதத்திற்கும் அதிகமான பங்குரிமை கொண்டவராக இருக்கலாம்.

(c) வாடிக்கையாளர் சட்டரீதியான கூட்டாட்சி இல்லாத ஒரு சங்கம் அல்லது பல தனிநபர்கள் சேர்ந்த ஒரு அமைப்பாக இருந்தால், பயனாளி உரிமையாளர் என்பவர் ஒரு மனிதர். இவர் தனியாகவோ, கூட்டாகவோ, ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட தீர்ப்பாய்வுக்குரிய தனி நபராகவோ, அமைப்பின் / நிறுவனத்தின் சொத்து, மூலதனம் அல்லது லாபத்தில் 15 சதவிகிதத்திற்கும் மேல் உரிமை கொண்டாடுபவராக இருக்கலாம்.

**விளக்கம்:** தனிநபர் சேர்ந்த அமைப்பு என்பது, சங்கங்களையும் உள்ளடக்கியதாகும். மேலே குறிப்பிட்ட (a), (b), (c)-யில் தனிநபர் எவரையும் அடையாளப்படுத்த முடியாத சூழலில், மூத்த மேலாண்மை பொறுப்பு வகிக்கும் நபர் பயனாளி உரிமையாளராகக் கருதப்படுவார்.

(d) வாடிக்கையாளர் ஒரு அறங்காப்பு நிறுவனமாக இருக்கும்பட்சத்தில் பயனாளி உரிமையாளர் என்பவர் அறங்காப்பு நிறுவனத்தை உருவாக்கியவர், அறங்காப்பாளர், பயனாளிகள் அந்த அறங்காப்பு நிறுவனத்தில் 15 சதவிகிதத்திற்கும் மேல் நல அக்கறை உடையவரைக் குறிப்பதாகும். அல்லது மொத்தமாக அந்நிறுவனத்தின் மீது தொடர் சீர்மரபு வழக்கத்தால், கட்டுப்பாட்டை கைவசம் வைத்திருக்கும் நபரைக் குறிப்பதாகும்.

## v. அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்களின் சான்றுரைக்கப்பட்ட பிரதிகள்

ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பினால் சான்றுரைக்கப்பட்ட ஆவணத்தைப் பெறுதல் என்பதன் விளக்கம் இதோ: ஒரு வாடிக்கையாளர் அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணத்தின் பிரதியை அளிக்கும்போது அதை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அசல் ஆவணத்தோடு ஒப்பிட்டு, அதற்கான அத்தாட்சியாக பிரதியின் மீது அதைப் பதிவிட்டு பெற்றுக்கொள்வதாகும்.

அன்னியச் செலாவணி மேலாண்மை விதிகள் 2016 ( FEMA 5(R) )இல் குறிப்பிட்டபடி, வாடிக்கையாளர் அயல் நாட்டில் குடியிருக்கும் இந்தியரானால், இந்திய வம்சாவளியை சேர்ந்தவரானால், அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணத்தின் பிரதியை அளிக்கும்போது, அவை பின்வரும் ஏதேனும் ஒருவரால் சான்றுரைக்கப்படலாம்.

- இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் அயல்நாட்டுக் கிளைகளில் பணியாற்றும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள்.
- இந்தியாவில் உள்ள வங்கிகளுடன் தொடர்பு கொண்டுள்ள அயல்நாட்டு வங்கிக் கிளைகள்.
- அயல்நாட்டில் வசிக்கும் நோட்டரிப் பப்ளிக்
- நீதிபதி (சிறு நீதிமன்றம்)
- நீதிபதி

➢ <u>வெளிநாட்டில் வாழும் இந்தியர் வசிக்கும் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகம் / ஆட்சிப் பேராளர்</u>

vi. **உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் பதிவேடுகளின் மையக் காப்பகம்**(CKYCR–Central Know Your Customer Registry) விதிகள் 2 (1) (aa)-ன் படி, ஒரு வாடிக்கையாளரின் உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் பதிவேடுகளை எண்மின் வடிவில் வாங்கி பாதுகாத்து, மீட்டெடுத்துத் தர உதவும் அமைப்பே உங்கள் வாடிக்கையாளரை அறிவீர் பதிவேடுகளின் மையக் காப்பகம்.

vii. குறிப்பிடப்பட்ட இயக்குனர் – பணச்சலவைத் தடுப்புச் சட்டம் மற்றும் விதிகளின் பகுதி iv-ல் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டளைப் பொறுப்புகள் ஒட்டு மொத்தமாக நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு நியமித்துள்ள நபரே குறிப்பிடப்பட்ட இயக்குனர் ஆவார். பின்வருபவர்களும் இதில் சேர்க்கப்படுவர்.

a) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு ஒரு கம்பெனி (குழுமமாக) இருக்கும்பட்சத்தில், நிர்வாக மன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேலாண்மை இயக்குனர் அல்லது முழுநேர இயக்குனர்.

b) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு ஒரு கூட்டாண்மை வணிக நிறுவனமானால், மேலாண்மை செய்யும் கூட்டாளி.

c) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு வணிக நிறுவனமானால், அதன் சொந்தக்காரர்.

d) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு அறங்காப்பு நிறுவனமானால், அதன் அறங்காவலர்.

e) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு சட்டப்பூர்வமாக இணைக்கப்படாத தனிநபர்கள் அமைப்பு, அல்லது சங்கமாக இருந்தால், அதன் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி மேலாண்மை செய்யும் அதிகாரம் பெற்ற நபர்.

f) கூட்டுறவு வங்கிகள் மற்றும் பிராந்திய கிராமப்புற வங்கிகளைப் பொறுத்தவரை, குறிப்பிடப்பட்ட இயக்குனர் என்பவர், முதுநிலை

மேலாண்மை மற்றும் அதிகாரப் பொறுப்பிலுள்ள நபர் குறிப்பிடப்பட்ட இயக்குனர் ஆவார்.

**விளக்கம் –** இந்த சட்டப்பிரிவைப் பொறுத்தவரை, மேலாண்மை இயக்குனர் முழுநேர இயக்குனர் என்பதன் விளக்கம், கம்பெனிகள் சட்டம் 2013-ல் குறிப்பிட்டபடியே அமைந்திடும்.

viii. இலாபநோக்கில்லா நிறுவனங்கள் என்பவை பின்வரும் எந்தவகையைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். அறங்காப்பு நிறுவனம் அல்லது சங்கமாக (சொசைட்டி) சங்கங்கள் பதிவுச் சட்டம் 1860 அல்லது அதுபோன்ற வேறு ஏதாவது சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது அல்லது கம்பெனிகள் சட்டம் 2013-ன் பிரிவு 8-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனியாக இருக்கலாம்.

ix. **அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணம் என்பது பின்வருவன:** கடவுச் சீட்டு, ஓட்டுநர் உரிமம், தன்வசம் வைத்திருக்கும் உரிய ஆதார எண், இந்தியத் தேர்தல் கமிஷன் வெளியிடும் வாக்காளர் அடையாள அட்டை, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத சட்ட (NREGA) திட்டத்தின் பயனாளிக்கு வழங்கப்பட்ட உரிய மாநில அரசு அதிகாரியால் கையொப்பமிடப்பட்ட பணி ஆணை அட்டை, தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவாளர் வெளியிடும் பெயர் மற்றும் முகவரியுடன் கூடிய கடிதம் இவை அனைத்திற்குமான நிபந்தனைகள் பின்வருமாறு:

a) அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணமாக தன் வசமுள்ள ஆதார் எண்ணை ஒரு வாடிக்கையாளர் சமர்ப்பித்தால், அதை இந்திய தனிநபர் சிறப்பு அடையாள அதிகாரியால் வழங்கப்படும் படிவ வடிவில் சமர்ப்பிக்க வேண்டும்.

b) ஒரு வாடிக்கையாளர் அளிக்கும் அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணத்தில் தற்போதைய முகவரி இல்லாமலிருந்தால், பின் வரும் ஆவணங்களை முகவரிக்கான சான்றுக்காக மட்டும், அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணமாக ஏற்றுக் கொள்ளலாம்.

(i) நுகர்வு பில் (தொலைபேசி, மின்சாரக் கட்டணம், மொபைல், சமையல் எரிவாயு போன்ற) கடந்த இரண்டு மாதங்களுக்கு உட்பட்டதாக இருக்கும் பில்களைச் சமர்ப்பிக்கலாம்.

(ii) சொத்து அல்லது நகராட்சி வரி செலுத்திய ரசீது.

(iii) அரசுத் துறைகள் அல்லது பொதுத் துறை நிறுவனங்கள் வழங்கும் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதிய ஆணைகள் ஓய்வூதியதாரருக்கு வழங்கப்பட்டால், அதில் தற்போதைய முகவரி இருப்பின் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

(iv) மாநில அல்லது மத்திய அரசுத் துறைகள், சட்டரீதியான ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள், பொதுத்துறை சார்ந்த நிறுவனங்கள், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள், நிதி நிறுவனங்கள், பங்குகள், பட்டியலிடப்பட்ட கம்பெனிகள் தத்தம் பணியாளர்களுக்கு அலுலக ரீதியாக வழங்கும் குடியிருப்புக்கான ஒதுக்கீட்டுக் கடிதம், அதற்குரிய வாடகை ஒப்பந்தம்.

c) வாடிக்கையாளர் தனது தற்போதைய முகவரியுடன் கூடிய அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணத்தை மேற்குறிப்பிட்ட (b)-ல் உள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்த 3 மாதங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

d) அயல்நாட்டில் வாழ்பவர் சமர்ப்பித்த அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணத்தில், முகவரி குறித்த விவரங்கள் இல்லாதபட்சத்தில், அயல்நாட்டில் செயலாட்சி எல்லையுடைய அரசுத் துறைகள், தூதரகங்கள் வெளியிடும் ஆவணங்கள், இந்தியாவிலுள்ள அயல்நாட்டுத் தூதரகம் அளிக்கும் கடிதம் ஆகியவை முகவரிச் சான்றாக ஏற்றுக் கொள்ளப்படும்.

**விளக்கம்–** இந்த ஷரத்தின் நோக்கத்திற்காக ஒரு ஆவணம் உரியவரின் பெயர் வெளியிட்டதிற்குப் பின்னர் மாற்றம் செய்யப்பட்டிருந்தால், அந்த ஆவணம் அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணமாக ஏற்றுக் கொள்ளப்படும். அதற்குரிய துணை செய்யும் ஆவணங்களாக மாநில அரசால் வெளியிடப்படும் திருமணச் சான்றிதழ் அல்லது பெயர் மாற்றத்திற்குரிய அரசிதழ் அறிவிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படும்.

x. ஆதார் விதிகளில் கூறப்பட்டுள்ளபடி, அங்கீகரிக்கப்படாத ஆதார் எண் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டால், அதை விதிகளில் கூறப்பட்டுள்ள

முறைப்படி கணினி தொடர்பில்லா வழியில் சரிபார்த்து உறுதி செய்யும் செயல்முறை, ஆஃப் லைன் வெரிபிகேஷன் (offline verification) எனப்படும்.

xi. ‘நபர்‘ என்பவர் அந்த சட்டத்தில் குறிப்பிட்ட பொருளிலேயே எடுத்துக் கொள்ளப்படும். அந்த சொல் கீழ்க்கண்டவர்களையும் குறிக்கும்.

(a) தனிநபர்
(b) ஹிந்து கூட்டுக்குடும்பம்
(c) ஒரு கம்பெனி
(d) ஒரு நிறுவனம்
(e) நபர்களின் கூட்டமைப்பு, சங்கம், இணைந்து கூட்டாக உருவாக்கப்பட்டாலும் / உருவாக்கப்படாவிட்டாலும்.
(f) செயற்கையான தீர்ப்பாய்வுக்குரிய நபர் (மேலே (a) to (e)-யில் குறிப்பிட்ட எந்த வகையையும் சாராதவர்).
(g) மேலே (a) to (f) வரையில் குறிப்பிட்ட நபர்களால் கட்டுப்படுத்தப்படும் அல்லது சொந்த உரிமை கொண்டாடக்கூடிய முகவர், அலுவலகம் அல்லது கிளையையும் குறிக்கும்.

xii. விதிகளில் 8-ம் எண்ணில் குறிப்பிட்டபடி, தகவல் அளிக்கும் பொறுப்பிற்காக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு நியமிக்கும் அதிகாரி **முதன்மை அதிகாரி** என்று கருதப்படுவார்.

xiii. சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனை என்பது கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது. நல்லெண்ணம் மற்றும் நம்பிக்கையுடன் ஒருவர் பரிவர்த்தனையை பணமாகவோ அல்லது வேறுவிதமாகவோ மேற்கொள்ளும்போது அல்லது முயற்சிக்கும்போது –

(a) பணத்தின் மதிப்பு எதுவாக இருப்பினும் அது ஒரு குற்றத்தின் (பட்டியலில் உள்ளபடி) விளைவாகக் கிடைத்திருக்கலாமோ என்பதற்கான சந்தேகத்தைத் தோற்றுவிப்பதற்கான நியாயமான காரணங்கள் இருக்குமானால், (அல்லது)

(b) பரிவர்த்தனை நிகழும் நேரம் மற்றும் சூழல் அசாதாரணமாக அல்லது ஏற்றுக்கொள்ளமுடியாத குழப்பங்கள் நிறைந்ததாக இருக்குமானால், (அல்லது)

(c) பொருளாதார ரீதியாக அல்லது ஏற்றுக்கொள்ள முடியாததாக, நியாயமான நோக்கமற்றதாகத் தோன்றினால், (அல்லது)

(d) தீவிரவாதம் தொடர்பான அல்லது செயல்பாடுகளுக்கு நிதியுதவி அளிப்பதாக அமைகிறதோ என்கின்ற சந்தேகத்திற்கான நியாயமான முகாந்திரம் இருக்குமானால்,

**விளக்கம்:**தீவிரவாதம் தொடர்பான செயல்பாடுகளுக்கு உதவிடும் பரிவர்த்தனைகள் என்பவை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும். தீவிரவாதத்தோடு தொடர்புடைய நிதி அல்லது தொடர்புபடுத்தப்-படலாம் என்ற ஐயத்திற்குரிய அல்லது தீவிரவாதியுடன் தொடர்புடைய அவர்தம் அமைப்புகள், அல்லது அவர்களுக்கு ஆதரவு தரும் அமைப்புகளுக்கு நிதியுதவி அளித்திடுதல்.

xiv. பணச்சலவை தடுப்பு விதிகள்2005-ன் உபவிதி (5)-ல் குறிப்பிட்டுள்ளபடி, தொடங்கப்பட்ட சேமிப்புக் கணக்கு “சிறு கணக்கு“ என்று அழைக்கப்படும். பகுதி 23-ல் இத்தகு சிறுகணக்கின் செயல்பாடுகள் அவற்றின் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் குறித்து விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

xv. பரிவர்த்தனை என்பது வாங்குதல், விற்பனை, கடன், அடமானம், அன்பளிப்பு, நிதிமாற்றம், அளிப்பு அல்லது இவற்றிற்கான ஏற்பாடுகள் இவற்றில் கீழ்க்கண்டவைகளும் அடங்கும்.

(a) ஒரு கணக்கு தொடங்குதல்

(b) பணம் அல்லது காசோலை வடிவில், கொடுப்பாணை அல்லது பிற உபகரணங்கள் மூலமாக, அல்லது இவ்வாறாக அன்றி மின்னணு முறையில் கணக்கில் பணம் வரவு வைத்தல், எடுத்தல், மாற்றுதல், நிதிமாற்றம் செய்தல்

(c) பாதுகாப்பு பெட்டக வசதியை அல்லது அது போன்ற எந்த வகையான வசதியையும் பெறுதல்

(d) பொறுப்பாளர் என்ற முறையிலான தொடர்பை ஏற்படுத்தும் பரிவர்த்தனை

(e) ஒப்பந்த ரீதியாக அல்லது சட்டப்பொறுப்பு சார்ந்து பணம் முழுமையாக அல்லது பகுதியாகக் கொடுத்தல் அல்லது பெற்றுக்கொள்ளுதல்

(f) ஒரு சட்டப்பூர்வ நபரை அல்லது ஏற்பாட்டை உருவாக்குதல் அல்லது உறுதிசெய்தல்

b) இந்த வழிகாட்டுதலைப் பொறுத்தமட்டில், சூழல் காரணமாக வேறுவிதமாகத் தேவைப்பட்டாலன்றி பின்வரும் சொற்றொடர்கள் கீழ்க்கண்ட கருத்திலேயே எடுத்துக்கொள்ளப்படும்.

(i) வரிவிவகாரங்களைப் பொறுத்தவரை, அவற்றிற்கு உதவியாக பரஸ்பர நிர்வாக உதவி ஏற்பாட்டின் பகுதி 6-ல் குறிப்பிட்டபடி, தகவல்களை தன்னிச்சையாக பரஸ்பரம் பரிமாறிக்கொள்ள, பல்வேறு தளங்களில் செய்துகொண்ட ஒப்பந்தங்களை அமலாக்கம் செய்திடத் தேவையான தகவல் அறிவிக்கும் தரநிலைகள் “பொதுவான தகவல் அறிவிக்கும் தரநிலைகள்“(CRS) என்று அழைக்கப்படுகின்றன.

(ii) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புடன் ஏதாவதொரு நிதியியல் பரிவர்த்தனை அல்லது செயல்பாட்டில் ஈடுபடும் நபர், மேலும் அந்த நபரின் சார்பில் பரிவர்த்தனையில் ஈடுபடும் அல்லது செயல்பாட்டில் ஈடுபடும் நபர் வாடிக்கையாளர் எனப்படுவார்.

(iii) கணக்கு அடிப்படையில் ஏற்பட்ட தொடர்பு ஏதுமின்றிஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புடன் ஏதாவதொரு பரிவர்த்தனையில் ஈடுபடும் நபர் “வந்துபோகும் வாடிக்கையாளர்” எனப்படுவார்.

(iv) வாடிக்கையாளர் மற்றும் பயனாளி சொந்தக்காரரை அடையாளம் கண்டு சோதித்தறியும் செயல்முறையே வாடிக்கையாளர் மீதான கூர்ந்த கவனம் என்பதாகும்.

(v) வாடிக்கையாளர் மீதான கூர்ந்த கவனம் குறித்த செயல்முறையே வாடிக்கையாளரை அடையாளப்படுத்துதலாகும்.

(v) அமெரிக்கா நாட்டில் உள்ள அயல்நாட்டு வரி உடன்பாட்டுச் சட்டம் (Foreign Account Tax Compliance Act-FATCA),மற்றவற்றிற்கிடையே ஒரு கட்டளையை விதித்துள்ளது. அயல்நாட்டு நிதி நிறுவனங்களில், அமெரிக்க நாட்டில் வரி செலுத்தும் நபர்கள் வைத்துள்ள நிதிசார்ந்த கணக்குகள் குறித்தும், அவர்கள் வசம்

(vi) கணிசமான பங்குரிமை வைத்துள்ள அயல்நாட்டு நிறுவனங்கள் குறித்தும், அந்நிறுவனங்கள் அறிக்கை தாக்கல் செய்வது அவசியமாகும்.

(vii) (Inter Governmental Agreement-IGA) IGA என்பது இந்திய அரசாங்கத்திற்கும் அமெரிக்க அராசங்கத்திற்கும் இடையே உள்ள பரஸ்பர ஒப்பந்தத்தைக் குறிக்கும். பன்னாட்டு வரி விதிகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அமெரிக்க நாட்டின் FACTA-யை அமல் செய்வதை இது மேம்படுத்துகிறது.

(viii) KYC தகவலைத் தொகுத்து தனி நபர்களுக்கும் சட்டரீதியான அமைப்புகளுக்கும் அளிப்பதற்கு வசதியாக கணினி வழி வடிவ வரையறைகள் (templates) தயாரிக்கப்பட்டுள்ளன. அவை KYC வடிவ வரையறைகள் என்று அழைக்கப்படும்.

(ix) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு அலுவலகங்கள் அல்லது அவர்களின் அதிகாரிகளை நேரில் சந்திக்காமலும், அலுவலகங்களுக்கு வராமலும், கணக்குகளைத் தொடங்கிய வாடிக்கையாளர்கள் “நேரில் காணாத வாடிக்கையாளர்கள்“ என்று அழைக்கப்படுவர்.

(x) வாடிக்கையாளர்களின் பின்புலம், அவர்களின் நிதி ஆதாரங்கள் இவற்றைக் கருத்தில் கொண்டு, அவர்தம் கணக்குகள், பிற பரிவர்த்தனைகளில் நிகழும் மாற்றங்கள் சீராக உள்ளனவா என்பதைச் சீரான இடைவெளிகளில் கண்காணிக்கும் நடைமுறை “தொடர் கூர்ந்த கவனம்“ என்று அழைக்கப்படும்.

(xi) வாடிக்கையாளர் குறித்து “வாடிக்கையாளர் கூராய்ந்த கவன“ நடைமுறையின் கீழ் சேகரிக்கப்பட்ட தகவல்கள் அவ்வப்போது சரியாகத் திருத்தப்பட்டு, உரிய பதிவுகளோடு சரிபார்த்துத் திருத்தப்பட்டு, முறையாக வைக்கப்பட்டுள்ளதா என்பது இந்திய ரிசர்வ் வங்கி பரிந்துரைத்த கால இடைவெளிகளில் சீராய்வு

செய்யப்படுகிறதா என்பதை உறுதி செய்திட கையாளப்படும் நடைமுறையே "சீரான கால அளவில் திருத்தப்பட்ட நடைமுறை" எனப்படும்.

(xii) (Politically Exposed Persons-PEPs) அரசியல் ரீதியாக படுநிலையில் உள்ள நபர்கள்: அயல்நாட்டில் மாநில அளவில் பொதுநிர்வாக அமைப்பில், அரசாங்க உயர் தலைமைப் பொறுப்பில் உள்ள நபர்கள், முதுநிலை அரசியல்வாதிகள், முதுநிலை அரசாங்க உயர் அதிகாரிகள் / நீதித்துறை / இராணுவ அதிகாரிகள் / அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவன அதிகாரிகள், முக்கிய அரசியல் கட்சிப் பிரமுகர்கள் ஆகியோர் அரசியல் ரீதியாகப் படுநிலையில் உள்ளவர்களாகக் கருதப்படுவார்கள்.

(xiii) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு என்பதில் பின்வருபவை அடங்கும்.

(a) அனைத்து பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் (-Schedule Commercial Banks - SCBs), பிராந்திய கிராமப்புற வங்கிகள் (Regional Rural Banks – RRBs) / உள்ளூர் வங்கிகள் (Local Area Banks – LABs) / அனைத்து தொடக்கநிலை (நகர்ப்புற) கூட்டுறவு வங்கிகள் (All Primary (Urban) Co-operative Banks (UCBs) / மாநில மற்றும் மத்திய கூட்டுறவு வங்கிகள் (State and Central Co-operative Banks (St.CBs / CCBs) இவற்றோடு வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949-ன் பிரிவு 22-ன் கீழ் உரிமம் பெற்ற அமைப்புகள் இவை அனைத்துமே வங்கிகள் என்று அழைக்கப்படும்.

(b) அகில இந்திய நிதி நிறுவனங்கள்.

(c) அனைத்து வங்கிசாரா நிதி (கம்பெனிகள்) நிறுவனங்கள், இதர வங்கிசாரா நிதி (கம்பெனிகள்) நிறுவனங்கள், மீதமுள்ள வங்கிசாரா நிதி (கம்பெனிகள்) நிறுவனங்கள்.

(d) அனைத்து பட்டுவாடாத் தீர்வு முறைமை அளிப்பவர்கள் (Payment System Providers), முறைமையில் பங்கேற்பாளர்கள் மற்றும் முன்பணம்

செலுத்தப்பட்ட உபகரணங்களை வெளியிடுவோர் (Prepaid Payment Instrument Issuers).

(e) பணமாற்று சேவை திட்டத்தின் கீழி முகவர்களாக உள்ள அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் (Authorised Persons-APs), இவர்கள் நெறிமுறையாளரால் ஒழுங்குபடுத்தப்படுபவர்கள்.

(xiv) ஒரு வங்கி தனது எந்தவொரு அலுவலகமோ, கிளையோ அமையப்பெறாத ஒரு நாட்டிலே தோற்றுவிக்கப்பட்டு, எந்தவொரு நெறிப்படுத்தப்படும் நிதியியல் அமைப்புகளின் தொகுப்பிலும் சேராததாயின், அந்த வங்கி “மறை ஓடு வங்கி“ (Shell bank) என்று அழைக்கப்படும்.

(xv) ஒரு முனையிலுள்ள நபர் இயற்கையான சட்டரீதியான வங்கியின் வாயிலாக நேரடியாக அல்லது மின்னணு முறையில் பலவகையான தொடர் பரிமாற்ற சேவைகள் மூலமாக அடுத்த முனையிலுள்ள பயனாளிக்குப் பணத்தை அனுப்பும் நடைமுறை “தந்திவழி பரிமாற்றம்“ என்று அழைக்கப்படும்.

(xvi) **“உள்நாட்டு மற்றும் அயல்நாட்டுத் தந்திவழிப் பரிமாற்றம்”** ஒரு பணப்பரிமாற்றத்தைத் தொடங்கும் வங்கியும், பயனாளி வங்கியும் ஒன்றாகவோ, வெவ்வேறாகவோ இருப்பினும், ஒரே நாட்டில் அமையப்பெற்றிருந்தால் அவற்றிற்கு இடையே நடக்கும் பரிமாற்றம் **“உள்நாட்டுத் தந்திவழிப் பரிமாற்றம்“** என்று அழைக்கப்படும். இந்த வங்கிகள் வெவ்வேறு நாட்டில் அமையப்பெற்றிருந்தால் இந்த வகைப் பரிமாற்றம், **“அயல்நாட்டுத் தந்திவழிப் பரிமாற்றம்“**என்று அழைக்கப்படும்.

(c) இதர சொற்பதங்கள் இங்கே குறிப்பிடப்பட்டால் தவிர, பின்வரும் சட்டங்களில் அவை பயன்பாட்டில் உள்ளவாறே பொருள் கொள்ளப்படும். அந்த சட்டங்களாவன: வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1935, பணச்சலவைத் தடுப்புச் சட்டம் 2002, பணச் சலவைத் தடுப்பு (பதிவேடுகள் பராமரிப்பு) விதிகள் 2005, ஆதார் (நிதியியல் மற்றும்இதர உதவித் தொகை, நிதிப்பலன்கள், சேவைகள் தொடர்பான இலக்கை அடையும் அளிப்புகள்) சட்டம் 2016, அவற்றின் தொடர்புடைய விதிமுறைகள், ஆதார்மற்றும்இதரசட்டங்கள் (திருத்தம்) மேலாணை, 2019, இவற்றின் மீதான சட்டப்பூர்வ திருத்தம், மாற்று ஆணை, எந்தவகையாக குறிப்பிடப்பட்டாலும் அவற்றையும் உள்ளடக்கியதாகும்.

## அத்தியாயம்-II
## பொதுவானவை

4. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளின் நிர்வாக மன்றம் அல்லது அதற்குரிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட “உங்கள் வாடிக்கையாளரை அறியும் கொள்கை“ ஒன்று அமைந்திருக்கவேண்டும்.

5.இந்த “உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்“ கொள்கையில் கீழ்க்கண்ட நான்கு முக்கிய அம்சங்கள் இருக்கவேண்டும்.

(a) வாடிக்கையாளர் ஒப்புதல் அளிக்கும் கொள்கை
(b) நேரிடர் மேலாண்மை
(c) வாடிக்கையாளரை அடையாளம் காணும் செயல்முறைகள்
(d) பரிவர்த்தனைகள் கண்காணிப்பு

### 6. குறிப்பாக நியமிக்கப்பட்ட இயக்குநர்

(a) பணச்சலவைத் தடுப்புச் சட்டத்தின் பகுதி IV மற்றும் விதிகளில் விதிக்கப்பட்ட பொறுப்புகள் மற்றும் நிபந்தனைகள் ஒட்டுமொத்தமாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்யும் பொருட்டு, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் நியமிக்கும் ஒரு அதிகாரியே குறிப்பாக நியமிக்கப்பட்ட இயக்குநர் ஆவார்.

(b) குறிப்பாக நியமிக்கப்பட்ட இயக்குநரின் பெயர், பதவி மற்றும் முகவரி நிதிப் புலனாய்வு இந்தியா (FIU-IND))-விற்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

(c) ஒரு நிறுவனத்தின் முக்கிய அதிகாரி எக்காரணம் கொண்டும் குறிப்பாக நியமிக்கப்பட்ட இயக்குநராக செயலாற்றக்கூடாது.

### 7. முக்கிய அதிகாரி

(a) சட்டம் மற்றும் விதிகளின்படி, பரிவர்த்தனைகளைக் கண்காணித்துத் தகவல்களைப் பகிர்ந்தளித்து தேவையின்படி அறிவிக்கும் பொறுப்பினை ஏற்றுச் செயல்படும் நபர் “முக்கிய அதிகாரி” ஆவார்.

(b) முக்கிய அதிகாரியின் பெயர், பதவி, மற்றும் முகவரி நிதிப் புலனாய்வு இந்தியா (FIU-IND)-க்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

## 8. KYC கொள்கையை நிறைவேற்றுதல்

(a) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு KYC கொள்கையை நிறைவேற்றப் பின்வரும் வழிகளைப் பின்பற்றிடவேண்டும்.

(i) KYC கொள்கைநிறைவேற்றத்திற்கான **"முதுநிலை மேலாண்மை"** நிலையில் யார் பதவி வகிப்பார் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

(ii) கொள்கையைச் சரியான முறையில் நிறைவேற்றிட, யாருக்கெல்லாம் பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதை நிர்ணயித்தல்.

(iii) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின் கொள்கை நடைமுறை (சட்டம் மற்றும் நெறிமுறை சார்ந்த விதிமுறைகள் உட்பட) நிறைவேற்றப் பணிகளைத் தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்தல்.

(iv) உடன் இயங்கும் தணிக்கை / உள்ளகத் தணிக்கை முறைகள் நிறுவப்பட்டு, KYC / AML (வாடிக்கையாளரை அறிந்து கொள்வீர் / பணச்சலவைத் தடுப்புச் சட்டம்) கொள்கை நிறைவேற்றப்படுதல்.

(v) தணிக்கைக் குழுவிடம் காலாண்டு தணிக்கை குறிப்புகள் மற்றும் கொள்கை பூர்த்தி செய்த குறிப்புகள் சமர்ப்பித்தல்.

(b) வாடிக்கையாளரை அறிவீர் கொள்கையின் நடைமுறைகளைப் பூர்த்தி செய்தல் தொடர்பான, முடிவெடுக்கும் செயல்பாடுகள் வெளியார்வசம் விடப்படாது என்பதை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு உறுதிசெய்திட வேண்டும்.

## அத்தியாயம்-III
## வாடிக்கையாளர் ஏற்புக் கொள்கை

9. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் வாடிக்கையாளர் ஏற்புக் கொள்கையை வடிவமைத்திடவேண்டும்.

10. பொதுவான விவகாரங்களில் எந்தவித எதிர்மறையான நோக்கும் இன்றி, வாடிக்கையாளர் ஏற்புக் கொள்கை பின் வரும் வகையில் அமைவதை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் உறுதி செய்திடவேண்டும்.

(a) போலியாகவோ / பெயரின்றியோ / வேறொருவர் பெயரிலோ எந்தக் கணக்கும் தொடங்கப்படாது.

(b) "வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகளை" (CDD), வாடிக்கையாளரின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தாலோ அல்லது அவர் அளித்த தகவல்கள் / ஆவணங்கள் நம்பத்தக்கனவாக இல்லை என்ற காராணத்தாலோ, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் பின்பற்ற முடியாதபட்சத்தில் அத்தகு வாடிக்கையாளருக்கு கணக்கு எதுவும் தொடங்கப்படவில்லை.

(c) வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறையை (CDD) பின்பற்ற எந்தவித பரிவர்த்தனை அல்லது கணக்கு சார்ந்த நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

(d) KYC நோக்கத்திற்காக கணக்கு தொடங்கும்போதும், அவ்வப்போது செய்யப்படும் தகவல் திருத்தத்தின்போதும், கட்டாயமாகத் தேவைப்படும் தகவல்கள் சிறப்பாக குறிப்பிடப்படும்.

(e) கணக்கு தொடங்கப்பட்ட பின், விருப்பத்தின்பேரில் அல்லது கூடுதலான தகவல்கள், வாடிக்கையாளரின் வெளிப்படையான ஒப்புதல் பெற்ற பின்னரே பெற்றுக்கொள்ளப்படும்.

(f) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள், தனிப்பட்ட வாடிக்கையாளர் அடையாளக் குறியீட்டு (UCIC) நிலையில் வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகளை செயல்படுத்தும். ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர் ஒருவர் KYC தேவைகளைப் பூர்த்தி செய்தவரானால், அவர்

மேலும் ஒரு கணக்கைத் தொடங்க அதே ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பை நாடினால், மீண்டும் கூராய்ந்த கவன நடைமுறைகளைச் செயல்படுத்தத் தேவையில்லை.

(g) கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தவரை, வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகள் (CDD) அந்தக் கணக்கிலுள்ள அனைத்து வாடிக்கையாளருக்கும் பின்பற்றி செயல்படுத்தப்படும்.

(h) ஒரு வாடிக்கையாளர் மற்றொருவர் / மற்றொரு அமைப்பின் சார்பாக எந்த சூழ்நிலைகளில் செயலாற்ற அனுமதிக்கப்படுவார் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும்.

(i) இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அனுமதிப்பாளர்கள் பட்டியலில், குறிப்பிடப்பட்ட நபரின் பெயர் அல்லது அமைப்புடன் எந்தவொரு வாடிக்கையாளரின் அடையாளங்களுடன் ஒத்துப் போகவில்லை என்பதை உறுதிசெய்திடும் ஒரு நடைமுறை செயல்பாட்டில் இருக்கவேண்டும்.

11. வாடிக்கையாளர் ஏற்புக் கொள்கையின் விளைவாகப் பொதுமக்களுக்கு, குறிப்பாக நிதிநிலையிலும், சமுதாய ரீதியாகவும் பின்தங்கிய மக்களுக்கு வங்கி வசதி மறுக்கப்படக்கூடாது.

## அத்தியாயம் - IV
## நேரிடர் மேலாண்மை

12. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு, நேரிடர் மேலாண்மையின் பொருட்டு நேரிடரை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையைப் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக அமைத்திடவேண்டும்.

(a) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளின் நோக்கிலும், மதிப்பீட்டின் அடிப்படையிலும், வாடிக்கையாளர்கள், நேரிடரில் அதிகம், நடுத்தரம், குறைவு என்று மூன்று வகையாகப் பிரிக்கப்படுவார்கள்.

(b) வாடிக்கையாளரின் அடையாளம், சமுதாய / நிதிநிலை, அவர் செய்யும் வர்த்தகத்தின் தன்மை, அவர் செய்யும் வர்த்தகம் குறித்த தகவல், அமைந்திருக்கும் இடம் போன்ற பலவகையான அளவுருக்களின் அடிப்படையில், வாடிக்கையாளர் நேரிடர் அடிப்படையில் வகைப்படுத்தப்படுவார். வாடிக்கையாளரின் அடையாளத்தைப் பொறுத்தமட்டில், இணைய வழியில் அவர் அளிக்கும்

ஆவணங்களை சோதித்தறிதல் அல்லது அந்த ஆவணங்களை வெளியிட்ட அதிகாரிகள் வழங்கும் இதர சேவைகள் மூலம் கண்டறிதல்.

பலவகையான வாடிக்கையாளர்களிடம், நேரிடர் நோக்கில் சேகரிக்கப்படும் தகவல்கள், அவர்களைத் துளைத்தெடுக்கும் வகையில் இல்லாமல் அமைந்திடவேண்டும். இது குறித்த விவரம் உங்கள் வாடிக்கையாளரை அறிவீர்(KYC) கொள்கையில் தெரிவிக்கப்படவேண்டும்.

விளக்கம்: FATF பொது அறிக்கை, இந்திய வங்கிகள் சங்கம் (IBA) வெளியிட்டுள்ள அறிக்கைகள் மற்றும் KYC / AML மீதான வழிகாட்டி குறிப்புகள், இந்திய ரிசர்வ் வங்கி அனைத்துக் கூட்டுறவு வங்கிகளுக்கும் அனுப்பியுள்ள வழிகாட்டிக் குறிப்பு ஆகியவை, நேரிடர் மதிப்பீட்டிற்குப் பயன்படுத்தப்படலாம்.

## அத்தியாயம் – V

## வாடிக்கையாளரை அடையாளம் காணும் செயல்முறை (CIP)

## {Customer Identification Procedure (CIP)}

13. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் கீழ்க்கண்ட நிகழ்வுகளில் வாடிக்கையாளரை அடையாளம் காண முயற்சிகள் மேற்கொள்ளும்.

(a) வாடிக்கையாளருடன் கணக்கு தொடர்பான உறவு முறையைத் தொடங்கும்போது.

(b) வங்கியின் வாடிக்கையாளராக இல்லாத ஒரு நபர், அயல்நாட்டுப் பணம் பரிமாற்றம் செய்ய முற்படும்போது.

(c) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பிற்குக் கிடைத்த தகவலின் மெய்மைத்தன்மை குறித்து சந்தேகம் எழும்போது அல்லது அந்தத் தகவல் போதுமானதாக இல்லாதபோது.

(d) ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் அதிகமாக மதிப்புடைய மூன்றாம் நபரின் பொருட்களை முகவருக்கு விற்பனை செய்தல், சொந்தப் பொருட்களை விற்பனை செய்தல், கடன் அட்டை பாக்கிகளை செலுத்துதல், முன்பணம் செலுத்தப்பட்ட அட்டைகளை, பயணியர் அட்டைகளை விற்பனை செய்தல் – இத்தகு நிகழ்வுகளில்.

(e) கணக்கு வைத்திராத, வந்துபோகும் வாடிக்கையாளருக்காக பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது (மதிப்பு ரூபாய் ஐம்பதாயிரம் அல்லது அதற்கும் அதிகமாக இருக்கும்போது) இது ஒரு பரிவர்த்தனையாகவோ அல்லது தொடர்புடை.ய பல பரிவர்த்தனைகளாகவோ இருக்கலாம்.

(f) ஒரு வாடிக்கையாளர் (கணக்கு வைத்துள்ள அல்லது வந்துபோகும்) தனது பரிவர்த்தனைகளை பலவாறாகப் பிரித்து மதிப்பு ரூபாய் ஐம்பதாயிரத்திற்குள் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுவதாக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு கருதும்போது.

(g) கணக்குத் தொடங்கும்போது வாடிக்கையாளரை அறிமுகப்படுத்தும் நடவடிக்கையை நாடவில்லை என்று உறுதியாகக் கருதும்போது.

14. ஒரு வாடிக்கையாளருடன் கணக்கின் அடிப்படையிலான உறவுமுறையைத் தொடங்கும்போது, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் தன் விருப்பத்தின்பேரில், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மூன்றாம் நபர் மேற்கொண்ட வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறையை நம்பி செயல்படலாம்.

(a) வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகளை (CDD) மேற்கொண்ட மூன்றாம் நபர் அதற்குரிய தகவல் பதிவேடுகளை நடைமுறை முடிந்த இரண்டு நாட்களுக்குள் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பிற்கு அனுப்பி வைக்கவேண்டும் அல்லது மைய KYC பதிவேடுகளிலிருந்து பெற்றிடவேண்டும்.

(b) வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு, தொடர்புடைய அடையாளத் தகவல் மற்றும் ஆவணங்களின் பிரதிகள், மூன்றாம் நபரிடம் வேண்டுகோள் விடுத்தபின், தாமதம் ஏதுமின்றி கைக்குக் கிடைத்துவிடும் என்பதில் திருப்தியடைந்து, அதற்கான முயற்சிகளை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் எடுக்கவேண்டும்.

(c) பணச்சலவை தடுப்புச் சட்டத்தின்படி, வாடிக்கையாளர் கூராய்ந்த கவன (CDD) நடைமுறைகள் குறித்த தேவைகள், பதிவேடுகள் பாதுகாத்துவைக்கும் தேவைகள் ஆகியவற்றிற்கான நடவடிக்கைகளை, அந்த மூன்றாம் நபர் கடைபிடிக்கிறார். மேலும், அந்த மூன்றாம் நபர், இதற்காக நெறிபடுத்தப்பட்டு மேற்பார்வையிடப்பட்டு கண்காணிக்கப்படுகிறார்.

(d) அதிக நேரிடர் உள்ளது என்று மதிப்பிடப்பட்ட நாடு அல்லது செயலாட்சி எல்லயை சார்ந்தவராக அந்த மூன்றாம் நபர் அமைந்திடக்கூடாது.

(e) வாடிக்கையாளர் கூராய்ந்த கவனம் அதிகப்படியாகத் தேவைப்படுமானால், (அவ்வப்போது பொருந்தும் நேரங்களில்) அவை குறித்த பொறுப்பு, இறுதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பையே சாரும் .

**அத்தியாயம் VI**

**வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைபெற (CDD)**

**பிரிவு- I– தனிப்பட்ட நபர்களுக்கான கூராய்ந்த கவன நடைமுறை**

15. நீக்கப்பட்டது

16. வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறையை மேற்கொள்ளும்போது ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள், ஒரு தனி நபரிடமிருந்து பின் வருவனவற்றைப் பெற்றிடும். கணக்கு சார்ந்த உறவுமுறையை நிறுவும்போது, அல்லது ஒரு தனிநபர் பயனாளி, ஒரு சட்டப்பூர்வ அமைப்பின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது அதிகாரப் பகராளி இவர்களுடன் தொடர்பு மேற்கொள்ளும்போது ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் இதைப் பின்பற்றும்.

(a) அந்த நபரின் அடையாளம், முகவரி இவற்றைக் கொண்ட அலுவலக ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களில் (OVD) ஏதேனும் ஒன்றின் நகல்.

(b) சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம்.

(c) வருமானவரிக் கணக்கு எண் அல்லது வருமானவரி விதிகள் 1962-ன்படி படிவம் எண் 60.

(d) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு தனது KYC கொள்கையில் குறிப்பிடப்பட்ட, தான் மேற்கொள்ளும் வர்த்தகம் அல்லது நிதிநிலையைப் பொறுத்து வேண்டிடும் ஏதேனும் இதர ஆவணம்.

இவை அனைத்தும் கீழே குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

(i) ஆதார் (நிதியியல் மற்றும்இதர உதவித் தொகை, நிதிப்பலன்கள் சேவைகள் தொடர்பான இலக்கை அடையும் அளிப்புகள்) சட்டம், 2016 (18 of 2016) சட்டப்பிரிவு எண் 7-ல் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு பயன் அல்லது நிதிச்சலுகையைப் பெற விரும்பும்

பயனாளி நபரிடமிருந்து **வங்கிகள்** ஆதார் எண்ணைப் பெற்றுக்கொள்ளும். இந்தியாவின் தனித்துவமான அடையாள ஆணையத்தின் (Unique Identification Authority of India-UIAI) e-KYC அங்கீகரிக்கும் நடைமுறையைப் பின்பற்றி, வங்கிகள் அந்த ஆதார் எண்ணை சோதித்து, அங்கீகரிக்கும் வாடிக்கையாளர் அரசாங்கம் பிரிவு 7-ல் குறிப்பிட்ட ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ், நிதிச்சலுகை அல்லது பலனை தனது வங்கிக் கணக்கில் பெற விரும்புவதாக, உறுதிச் சான்றளித்தவுடன் இந்த நடைமுறை செயல்படுத்தப்படும்.

(ii) வாடிக்கையாளர் தனது ஆதார் எண்ணை அடையாளத்திற்குப் பயன்படுத்த தனது விருப்பத்தை தெரிவிப்பாரானால், வங்கிகள் இணையதள வழியின்றியும், அந்த நபரின் ஆதார் எண்ணை சோதித்தறியலாம். இதே நடைமுறையை வங்கிகள் அல்லாத ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளும் வாடிக்கையாளர் விருப்பத்தின் பேரில் பின்பற்றலாம்.

இவ்வாறு சோதித்தறிதல் வெற்றிபெற்றபின், வாடிக்கையாளர் இதர அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணம் எதையும், புகைப்படத்தையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை.

இவ்வாறாக, ஆதார் (நிதியியல் மற்றும்இதர உதவித் தொகை, நிதிப்பலன்கள் சேவைகள் தொடர்பான இலக்கை அடையும் அளிப்புகள்) சட்டம், 2016-ன் பிரிவு 7-ன் கீழ் நிதிச் சலுகை அல்லது பலனைப் பெறவிரும்பும் நபர் குறித்த பயோமெட்ரிக் e-KYC அங்கீகாரத்தை நோய், காயங்கள், வயோதிகம் அல்லது இது போன்ற இன்ன பிற காரணங்களால் மேற்கொள்ளமுடியாது போகலாம். அத்தகைய சூழலில் இணையமல்லாத வழிகளில் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் ஆதார அங்கீகாரத்தை சோதித்தறியலாம். மேலும் இதர அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்களில் பிறவற்றின் சான்றுரைக்கப்பட்ட நகல்களைப் பெறலாம். வாடிக்கையாளர் கூராய்ந்த கவனநடைமுறைகளில் இவ்வாறு விதிவிலக்காக செயல்படும் தருணங்களில் இத்தகு நிகழ்வுகள் சட்டப்பிரிவு 8-ல் குறிப்பிட்டபடி “உடன்நிகழ்வு தணிக்கை“க்கு உட்படுத்தப்படவேண்டும். இத்தகு விதிவிலக்கு நிகழ்வுகளின் விவரங்கள் தனியாக தகவல் தொகுதியில் கணினிவழி பாதுகாத்து வைக்கப்படவேண்டும். இத்தகவல் தொகுப்பில், வாடிக்கையாளர் குறித்த விவரங்களை, விலக்களிக்கப்பட்டதன் அடிப்படைக் காரணம், இதற்கு அங்கீக்காரமளித்த அதிகாரியின் பெயர், விலாசம் இன்னபிற... இத்தகவல் தொகுப்பு அவ்வப்போது உள்ளகத்தணிக்கை மற்றும் ஆய்விற்கு உட்படுத்தப்படவேண்டும். நெறியாளரின் மறுஆய்வுக்கும் அளிக்கப்படவேண்டும்.

**விளக்கம்: 1.**ஆதார் சட்டம் பிரிவு 7-ன் கீழ் அங்கீகாரம் தேவைப்படாத வாடிக்கையாளர் தனது ஆதார் எண்ணை சமர்ப்பித்தால், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் அந்த வாடிக்கையாளரின் ஆதார் எண் இருட்டடிப்பு செய்யப்படுவதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

**விளக்கம்: 2**. வாடிக்கையாளரின் பயோமெட்ரிக் அங்கீகாரத்தை வங்கி தனது அதிகாரி அல்லது வர்த்தக தொடர்பாளர் / ஏற்பாட்டாளர் மூலமாக செய்துகொள்ளலாம்.

**விளக்கம்: 3.** ஆதார் பயன்பாடு, ஆதார் வைத்திருக்கும் நபரின் நிரூபணம் போன்றவை அனைத்தும் ஆதார்குறித்த சட்டங்கள் விதிகள் அவற்றில் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டதாகும்.

17. வாடிக்கையாளரை நேருக்கு நேர் சந்திக்காமல் ஒருமுறை கடவுச்சொல் (OTP) மூலமாக கணக்குகள் தொடங்கப்படும்போது, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

(i) ஒருமுறை கடவுச்சொல் (OTP) அங்கீகாரம் மூலமாக கணக்கு தொடங்கிட, வாடிக்கையாளர் குறிப்பாக சம்மதத்தைத் தெரிவித்திருக்கவேண்டும்.

(ii) அந்த வாடிக்கையாளர் வைத்துள்ள அனைத்து வைப்புக் கணக்குகளிலும் உள்ள மொத்த இருப்புத் தொகை ரூபாய் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது. இருப்புத் தொகை ரூபாய் ஒரு லட்சத்தைத் தாண்டும்போது பின்வரும் வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறையில் (v)-ல் குறிப்பிட்டநிபந்தனை பூர்த்தியாகும்வரை, அந்த கணக்கு இயாங்காத நிலையை அடைந்துவிடும்.

(iii) ஒரு நிதியாண்டில், வைப்புக் கணக்குகளில் உள்ள மொத்த வரவுத்தொகை ரூபாய் இரண்டு லட்சத்தை தாண்டக்கூடாது.

(iv) கடன் கணக்குகளைப் பொறுத்தவரை குறித்தகாலக் கடன்கள் மட்டுமே அனுமதிக்கப்படும். ஒரு ஆண்டில், அனுமதிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூபாய் அறுபதாயிரத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

(v) ஒருமுறை கடவுச்சொல் (OTP) அங்கீகாரத்தைப் பயன்படுத்தி, e-KYC மூலம் தொடங்கப்பட்ட வைப்பு மற்றும் கடன் கணக்குகள் ஓராண்டிற்கும் மேல் நீட்டிக்கப்படமாட்டாது. ஓராண்டிற்கு மேல் சட்டப்பிரிவு 16-ல் குறிப்பிட்டபடி அடையாளப்படுத்தும் நடைமுறை செயல்படுத்தப்படவேண்டும்.

(vi) மேற்குறிப்பிட்டபடி, ஓராண்டிற்குள், வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறை முடிக்கப்படாதபட்சத்தில், அத்தகைய வைப்புக் கணக்கு உடனடியாக முடிக்கப்படும். அத்தகைய கணக்கு கடன் கணக்காக இருந்தால், மேலும் கடன் பற்று அனுமதிக்கப்படாது.

(vii) ஒருமுறை கடவுச்சொல் (OTP) அங்கீகாரத்தைப் பயன்படுத்தி, KYC அங்கீகாரத்துடன் நேருக்கு நேர் பாராமல் கணக்கு வேறு எந்த ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பிடமும் தொடங்கப்படவில்லை என்கின்ற உறுதிமொழியை ஒரு வாடிக்கையாளர் இத்தகைய கணக்கைத் தொடங்கும்போது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பிடம் அளிக்கவேண்டும். இத்தகைய கணக்குகள் தொடர்பான KYC தகவல்களைக் கணினியில் பதிவு செய்யும்போது, மைய KYC பதிவேடு இதைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். இதனால் இதர ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் இவற்றின் அடிப்படையில் கணக்குகள் நேருக்கு நேர் சந்திப்பின்றி ஒருமுறை கடவுச்சொல் (OTP) மூலம் தொடங்குதல் தவிர்க்கப்படும்.

(viii) இத்தகு கணக்குகளில் நடைமுறைகளில் ஏதேனும் விதிமீறல்கள், நெறிமுறை பூர்த்தி செய்யாத நிலைகள் இருப்பின், அவற்றை மேற்பார்வையிட ஏதுவாக எச்சரிக்கை அறிவிப்புகள் செய்யும் முறைமையை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

18. நீக்கப்பட்டது.
19. நீக்கப்பட்டது.
20. நீக்கப்பட்டது.
21. நீக்கப்பட்டது.
22. நீக்கப்பட்டது.

23. அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்கள் ஏதுமில்லாத ஒரு தனி நபர், வங்கிக் கணக்கைத் தொடங்க விருப்பப்பட்டால், வங்கிகள் கீழ்க்கண்ட வரையறைகளுக்கு உட்பட்டு **“சிறு கணக்குகளை“**த் தொடங்கலாம்.

(i) ஒரு நிதியாண்டில் கணக்கில் மொத்த வரவுகள் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

(ii) ஒரு மாதத்தில் மொத்தப் பணப்பரிமாற்றம், பணம் எடுத்தல்கள் ரூபாய் பத்தாயிரத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

(iii) மேலும், அந்த கணக்கில் இருப்புத் தொகை ஒருபொழுதும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது. ஆயினும், இந்த இருப்புத் தொகையை கணக்கெடுக்கும்போது, அரசு சார்ந்த திட்டங்களிலிருந்து கிடைக்கும்

பயன்களின் வரவுகள், வாங்கிய பொருட்களுக்கு செலுத்தும் பற்றுகள் ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இவை தவிரவும், **“சிறு கணக்குகள்“**பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

a) சுய கையொப்பமிட்ட புகைப்பட நகலை வாடிக்கையாளரிடமிருந்து வங்கி பெற்றுக்கொள்ளும்.

b) இதற்கென நியமிக்கப்பட்ட வங்கி அதிகாரி ஒருவர், தனது முன்னிலையில் வாடிக்கையாளர் கையொப்பமிட்டார் அல்லது கைநாட்டுவைத்தார் என்று சான்றுரைக்கவேண்டும். வாடிக்கையாளர் ஒருவேளை கைதியாக சிறைச்சாலையில் இருப்பவரானால், வாடிக்கையாளரின் கையொப்பம் அல்லது கைநாட்டு, சிறையின் பொறுப்பிலுள்ள அதிகாரி முன்பாக வைக்கப்படவேண்டும். அதை அந்த அதிகாரி சான்றுரைக்கவேண்டும். மேலும், அந்தக் கைதியின் முகவரியை ஆண்டுதோறும் சான்றுரைத்து அளிக்கவேண்டும். அவ்வாறு அளிக்கும் காலம் வரை அந்தக் கணக்கு நடப்பில் இருக்கும்.

c) ஒருங்கிணைக்கப்பட்ட முக்கிய வங்கிப் பணிகளில் (Core Banking Solution-CBS) இணைக்கப்பட்ட வங்கிக் கிளைகளில் மட்டுமே, இத்தகைய கணக்குகள் தொடங்கப்படவேண்டும். இங்கே கணக்குகள் நேரிடையாக கண்காணிக்கப்படும். இதனால், அயல்நாட்டில் இருந்து பண வரவுகள் இத்தகைய கணக்குகளில் வரவு வைக்கப்படுவதில்லை என்பது உறுதி செய்யப்படும்.

d) ஒரு பரிவர்த்தனை இத்தகு கணக்குகளில் நடைபெறுவதற்கு முன்பாக இந்த கணக்குகளுக்கு உரிய மாதாந்தர, வருடாந்தர தொகை வரம்புகள், நிலுவை வரம்புகள் மீறப்படவில்லை என்பது உறுதி செய்யப்படவேண்டும்.

e) தொடக்கத்தில் இந்தக் கணக்கு பன்னிரண்டு மாதங்களுக்கு நடப்பில் இருக்கும். அது மீண்டும் அடுத்த 12 மாதங்களுக்குத் தொடர வேண்டுமானால், வாடிக்கையாளர், அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்கள் ஏதேனும் ஒன்றைப் பெறுவதற்காக, கணக்கு தொடங்கிய முதல் பன்னிரண்டு மாதங்களுக்குள் விண்ணப்பித்து அதற்கான அத்தாட்சியை சமர்ப்பிக்க வேண்டும்.

f) தளர்த்தப்பட்ட நடைமுறைகள் கணக்கு தொடங்கியபின் இருபத்தி நான்கு மாதங்களுக்குப் பின் சீராய்வு செய்யப்படும்.

g) கணக்கு நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்போது, பணச்சலவை, தீவிரவாதத்திற்கு நிதியுதவி, அதிகபட்ச நேரிடருக்கான சாத்தியக்கூறுகள் பற்றி சந்தேகங்கள் எழுமானால், வாடிக்கையாளரின் அடையாளம் காட்டும் ஏதாவது அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணம், வருமானவரிக் கணக்கு எண் அல்லது படிவம் 60 ஆகியவற்றை வங்கிகள் வாடிக்கையாளரிடமிருந்து பெற்று அதை உறுதி செய்துகொள்ளும்.

h) அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணம், வருமானவரிக் கணக்கு எண் அல்லது படிவம் 60-ஐ வாடிக்கையாளர் சமர்ப்பித்து, வாடிக்கையாளரின் அடையாளம் முழுமையாக உறுதி செய்யப்பட்ட பின்னரே, அயல்நாட்டுப் பண வரவு இத்தகு கணக்குகளில் அனுமதிக்கப்படும்.

## 24. வங்கிசாரா நிதி நிறுவனங்களில் கணக்கு தொடங்க எளிய நடைமுறைகள்

ஒரு வாடிக்கையாளர், அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணம் எதையும் அளிக்க முடியாத நிலையிலிருந்தால், ஒரு வங்கிசாரா நிதிநிறுவனம் தன் விருப்பத்தின் பேரில், பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அந்த நபருக்குக் கணக்கைத் தொடங்கலாம்.

a) வாடிக்கையாளரின் சுய கையொப்பமிட்ட புகைப்படத்தை வாடிக்கையாளரிடமிருந்து பெறலாம்.

b) நியமிக்கப்பட்ட வங்கிசாரா நிதிநிறுவனத்தின் அதிகாரி, தனது முன்னிலையில் வாடிக்கையாளர் கையொப்பமிட்டார் அல்லது கைநாட்டுவைத்தார் என்று சான்றுரைத்து அதன்பின் கணக்குத் தொடங்கலாம்.

c) கணக்குத் தொடங்கப்பட்டு பன்னிரண்டு மாதங்களுக்கு நடப்பில் இருக்கும். அதற்குள் சட்டப்பிரிவு 16-ன்படி வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகள் (CDD) செயல்படுத்தப்படவேண்டும்.

d) இத்தகு வாடிக்கையாளர் வைத்துள்ள எல்லா கணக்குகளின் ஒட்டுமொத்த இருப்பு ஒருபொழுதும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

e) எல்லாக் கணக்குகளின் மொத்த வரவுகள், ஒரு ஆண்டில் ரூபாய் ஒரு லட்சத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடாது.

f) மேற்குறிப்பிட்ட (d) மற்றும் (e)-ல் உள்ள வரம்புகள் மீறப்படுமானால்,வாடிக்கையாளர் KYC நடைமுறைகளைப் பூர்த்தி செய்தால் மட்டுமே, மேற்கொண்டு பரிவர்த்தனைகளை அவரின் கணக்குகளில் மேற்கொள்ள முடியும் என்ற விபரம் வாடிக்கையாளருக்கு அறிவுறுத்தப்படவேண்டும்.

g) வாடிக்கையாளரின் கணக்கில் இருப்பு ரூபாய் நாற்பதாயிரத்தை எட்டியதும், ஒரு ஆண்டில் மொத்த வரவுத் தொகை எண்பதாயிரத்தை எட்டியதும், அவருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பப்படவேண்டும். அதன்படி, KYC நடைமுறைக்குத் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். தவறினால், அவரின் கணக்கில், நிலுவைத்தொகை, மேற்குறிப்பிட்ட (d) மற்றும் (e)-ல் உள்ள வரம்புகளை மீறியதும், கணக்கின் நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.

25. நீக்கப்பட்டது.

26. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின் ஒரு கிளை / அலுவலகத்தில் KYC நடைமுறைகள் பின்பற்றப்பட்டு முடிவடைந்திருந்தால், அது திருத்தப்படும் காலம் வரவில்லையெனில், தொடர்புடைய கணக்குகள் அதே அமைப்பின் வேறொரு கிளை / அலுவலகத்திற்கு மாற்றப்படும்போது அதே நடைமுறைகள் கருத்தில் கொள்ளப்படும்.

## பிரிவு –II வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகள் – தனிநபர் வணிக நிறுவனங்களுக்கு

27. தனிநபர் வணிக நிறுவனத்திற்காக கணக்குத் தொடங்கும்போது அதன் உரிமையாளர் குறித்த வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகள் (CDD) பின்பற்றப்படும்.

28. மேற்குறிப்பிடப்பட்டதுடன் தனிநபர் வணிக நிறுவனத்தின் வர்த்தகம் / செயல்பாடு குறித்த அத்தாட்சிக்காக, அந்நிறுவனத்தின் பெயரில் உள்ள பின்வரும் ஆவணங்களைப் பெறவேண்டும்.

a) பதிவுச் சான்றிதழ்

b) முனிசிபல் நிர்வாகம் “கடை மற்றும்“ நிறுவன சட்டத்தின் கீழ் வெளியிட்ட சான்றிதழ் அல்லது உரிமம்.

c) விற்பனை மற்றும் வருமானவரி அறிக்கைகள்

d) பொதுசேவைகள் வரி / மதிப்புக்கூட்டுவரி / மைய விற்பனைவரி சான்றிதழ் (தற்காலிக / முழுமையான)

e) விற்பனை வரி / சேவை வரி / தொழிலர் வரி அதிகாரிகள் வெளியிட்ட சான்றிதழ் / பதிவுச் சான்றிதழ் போன்ற ஆவணம்

f) பொது அயல்நாட்டு வர்த்தகத்துறை வெளியிட்ட இறக்குமதி / ஏற்றுமதி சிறப்பு எண் அல்லது, சட்டரீதியான அமைப்பு, அந்த தனிநபர் வர்த்தக நிறுவனத்திற்கு அளித்த உரிமம் / தொழில்முறைப் பணிக்கான சான்றிதழ்

g) தனிநபர் வர்த்தக நிறுவனத்தின் வருமானம் கணக்கில் காட்டப்பட்டு, வருமான வரி விதிக்கப்பட்டுள்ள அந்த நிறுவனத்தின் உரிமையாளரின் முழுமையான அங்கீகரிக்கப்பட்ட வருமானவரி அறிக்கை (வெறும் ஒப்புகை அல்ல)

h) மின்சாரம், தண்ணீர், தொலைபேசி போன்ற நுகர்வு பில்கள்

29. இருவிதமான சான்றாவணங்களை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் அளிக்க முடியாதபோது, ஏதாவது ஒரு ஆவணத்தை வர்த்தக சான்றாக ஏற்றுக்கொள்ளலாம். ஆயின், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் வர்த்தகம் நடக்குமிடம், வர்த்தக செயல்பாடு குறித்து நேரில் விபரங்களைச் சேகரித்து, அங்குதான் வர்த்தகம் நடைபெறுகிறது என்பதை உறுதிப்படுத்திகொள்ளவேண்டும்.

## பிரிவு –III

## வாடிக்கையாளர் கூராய்ந்த கவன நடைமுறைகள் (CDD) சட்டரீதியான அமைப்புகளுக்கு

30. ஒரு குழுமத்தின் கணக்கைத் தொடங்க வேண்டுமானால், பின்வரும் ஆவண நகலின் சான்றுரைக்கப்பட்ட நகல்களைப்பெறவேண்டும்.

a) நிறுவன அமைப்புச் சான்றிதழ்
b) குழுமத்தின் பொதுநிலை அறிக்கை மற்றும் விதிகள்
c) குழுமத்தின் வருமானவரிக் கணக்கு எண்
d) குழுமத்தின் சார்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள அதன் மேலாளர்கள், அதிகாரிகளுக்கு அதிகாரமளிக்கும் நிர்வாக மன்றக் குழுவின் தீர்மானம்

e) குழுமத்தின் சார்பில் கையொப்பமிட்டு அதிகாரப்பூர்வமாக செயல்படும் மேலாளர்கள், அதிகாரிகள், பணியாளர்கள் குறித்த ஆவணங்கள் (பிரிவு 16-ல் குறிப்பிட்டபடி)

31. கூட்டுவர்த்தக நிறுவனத்தின் பெயரில் கணக்குத் தொடங்கவேண்டுமானால், பின்வரும் ஆவணங்கள் தேவை.

a) பதிவுச் சான்றிதழ்
b) கூட்டுவர்த்தக உடன்படிக்கை
c) கூட்டுவர்த்தக நிறுவனத்தின் வருமானவரிக் கணக்கு எண்
d) சட்டப்பிரிவு 16-ல் குறிப்பிட்டபடி கூட்டுவர்த்தக நிறுவனத்தின் சார்பில் செயல்பட அதிகாரம் பெற்ற நபர் குறித்த ஆவணம்

32. ஒரு அறக்கட்டளை அமைப்பின் பெயரில் கணக்குத் தொடங்கவேண்டுமானால், பின்வரும் ஆவணங்கள் தேவை.

a) பதிவுச் சான்றிதழ்
b) அறக்கட்டளையின் பத்திரம்
c) அறக்கட்டளை அமைப்பின் வருமானவரிக் கணக்கு எண் அல்லது படிவம் 60
d) சட்டப்பிரிவு 16-ல் குறிப்பிட்டபடி அறக்கட்டளை அமைப்பின் சார்பில் செயல்பட அதிகாரம் பெற்ற நபர் குறித்த ஆவணம்

33. A. ஒருங்கிணைந்து உருவாக்கப்படாத சங்கம், தனி நபர்களின் கூட்டமைப்பு ஆகியவற்றிற்காக கணக்குகள் தொடங்கும்போது பின்வரும் ஆவணங்களைப் பெறவேண்டும்.

a) சங்கம் அல்லது தனிநபர்களின் கூட்டமைப்பு நிர்வாகக் குழுவின் தீர்மானம்
b) அதன் வருமானவரிக் கணக்கு எண் அல்லது படிவம் 60
c) அதன் சார்பில் செயல்புரிய அளிக்கப்பட்ட அதிகாரப்பகர்வு ஆவணம்
d) சட்டப்பிரிவு 60-ல் குற்பிபட்டபடி அதன் சார்பில் செயலாற்ற அதிகாரமளிக்கப்பட்ட நபர் குறித்த ஆவணம்
e) அந்த அமைப்பு சட்டப்பூர்வமாக நிறுவப்பட்டது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புக்குத் தேவைப்படும் எந்த ஒரு தகவலையும் பெறலாம்.

**விளக்கம்:**பதிவு செய்யப்படாத அறக்கட்டளை அமைப்பு, கூட்டு வர்த்தக நிறுவனம் ஆகியவை தனிநபர்களின் சங்கமாக, ஒருங்கிணைக்கப்படாத அமைப்பாகக் கருதப்படும்.

**விளக்கம்:** தனிநபர்கள் சங்கம் என்பது சொசைட்டிகளையும் அடக்கியதாகும்.

33. B. சட்டப்பூர்வ அமைப்புகளில், மேற்குறிப்பிட்டவைகளில் அடங்காத சொசைட்டிகள், பல்கலைக்கழகங்கள், கிராமப் பஞ்சாயத்துகள் போன்றவற்றிற்கு கணக்குத் தொடங்கும்போது பின்வரும் ஆவணங்களைப்பெறலாம்.

a) அமைப்பின் சார்பில் செயல்பட அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர் கொண்ட ஆவணம்

b) சட்டப்பிரிவு 16-ன்படி அமைப்பின் சார்பில் செயல்பட்டு கையொப்பமிட அதிகாரம்படைத்தவர் குறித்த ஆவணம்

c) அமைப்பின் சட்டரீதியான நிர்வாகம் அதுகுறித்த ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு நிரூபணம் பெறத் தேவையான ஏதேனும் இதர ஆவணம்

## பகுதி –IV பயனாளி உரிமையாளரின் அடையாளம்

34. இயற்கையான தனிநபராக அன்றி சட்டப்பூர்வமான பயனாளி உரிமையாளரின் அடையாளத்தைக் கண்டுகொள்ள விதிகள் 9 (3)-ல் குறிப்பிடப்படும் அனைத்து முயற்சிகளையும், கீழ்க்கண்டவற்றைக் கவனத்தில் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் செயல்படவேண்டும்.

a) பங்குவர்த்தக நிலையத்தில் பட்டியலிடப்பட்ட ஒரு குழுமம் அல்லது அதன் துணைக்குழுமம் ஒரு அமைப்பின் நிர்வாகத்தில் கட்டுப்பாட்டைத் தன்வசம் வைத்திருந்து, அது வாடிக்கையாளராக இருக்கும்பட்சத்தில், அந்தக் குழுமங்களின் பங்குதாரர்களின் அடையாளங்களைச் சோதித்தறிய வேண்டியது அவசியமில்லை.

b) அறக்கட்டளை அமைப்பு / நியமனதாரர் என்ற முறையில் செயல்படும் கணக்குகளில், வாடிக்கையாளர், பொறுப்பாளர் அல்லது நியமனதாரர் என்கிற முறையில் அடுத்த நபருக்காக செயல்படலாம். இத்தகு கணக்குகளில் யாருக்காக செயல்படுகிறார்,அந்த அமைப்பின் தன்மை, அதற்காக செய்யப்பட்டுள்ள

ஏற்பாடுகள், செயல்படும் நபரின் அடையாளம் ஆகியவை குறித்த விபரமான தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும்.

## பிரிவு –V
## தொடர்ந்திடும் கூர்ந்த கவனம்

35. வாடிக்கையாளர் குறித்த விபரங்கள், அவரின் வர்த்தகம், கணக்கின் நேரிடர் வகை, நிதி ஆதாரங்கள் இவற்றிற்கு இயைந்தவண்ணம், கணக்கில் பரிவர்த்தனைகள் நடைபெறுகின்றன என்பதை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் தொடர்ந்திடும் கூர்ந்த கவனத்தால் அறிந்துகொள்ளவேண்டும்.

36. பொதுவாகக் கூர்ந்து கண்காணிக்கவேண்டிய காரணிகளைத் தவிரவும், பின்வரும் பரிவர்த்தனைகள் நிச்சயமாகக் கூர்ந்து கவனிக்கப்படவேண்டும்.

a) வாடிக்கையாளரின் பொதுவான செயல்பாட்டிற்குப் பொருந்தாத, மாறான வகையில் சரியான நோக்கமோ, வெளிப்படையாக அவரின் பொருளாதார நிலைக்கு ஒவ்வாத பல்வகையான சிக்கலான பரிவர்த்தனைகள் (நிகழ்நேர மொத்தத் தீர்வுகள் [RTGS] உட்பட).

b) குறிப்பிட்ட வரம்புகள் கொண்ட கணக்கு வகைகளின் வரம்பனை மீறிடும் பரிவர்த்தனைகள்.

c) நிலுவை இருப்பில் வைத்திருக்கும் தொகைக்குப் பொருந்தாத அதிக தொகை கொண்ட பரிவர்த்தனைகள்.

d) மூன்றாம் நபர் அளிக்கும் காசோலைகள், வரைவோலைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அதிக அளவில் பணமாக அதிலிருந்து எடுக்கப்படுதல்.

37. வாடிக்கையாளரின் நேரிடர் வகையைப் பொருத்து கண்காணிப்பின் அளவு, தீவிரமாக அமைந்திடும்.

**விளக்கம்:** அதிக நேரிடர் வகை கொண்ட கணக்குகள் தீவிரமான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படும்.

a) கணக்குகளை ‘நேரிடர்’ வகைப்படுத்தப்படும் முறைமை, சீராக அவ்வப்போது (குறைந்தபட்சம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது) ஆய்வு செய்யப்-படவேண்டும். கூர்ந்த கவன நடைமுறைகள் அதற்கேற்ப அதிகரிக்கப்படும்.

b) சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் குறிப்பாக பலதளநிலை (Multi-Level Marketing-MLM) சந்தைப்படுத்தும் குழுமங்களின் கணக்குகளில் உள்ள பரிவர்த்தனைகள் கூர்ந்து கண்காணிக்கப்படவேண்டும்.

**விளக்கம்:**அதிக காசோலைப் புத்தகங்களைக் கேட்கும் குழுமங்கள் ரொக்கமாக அதிக எண்ணிக்கையில் பல இடங்களில் ஒரே கணக்கில் பணம் வரவு வைக்கப்படுதல், பல காசோலைகள் ஒரே தொகைக்கு அல்லது ஒரே தேதியில் பல காசோலைகள் போன்ற நடவடிக்கைகள் இருந்தால், அவற்றை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் உடனடியாக இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நிதிப் புலனாய்வு இந்தியா (FIU-IND)) போன்ற உரிய அதிகாரிகளுக்கும் அறிவிக்கவேண்டும்.

**38. சீரான தொடர் திருத்தம்**

அதிக நேரிடர் உடைய வாடிக்கையாளர்களைப் பொறுத்தவரை, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும், நடுத்தரவகை நேரிடர் உடைய வாடிக்கையாளர்கள் எட்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும், குறைந்தவகை நேரிடர் உடைய வாடிக்கையாளர்கள் பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் தகவல் ஆய்வு (திருத்தம்), பின்வரும் முறைகளைப் பின்பற்றிச் செய்யப்படும்.

a) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் பின்வரும் நடைமுறைகளைச் செயல்படுத்தும்:

(i) சட்டப்பிரிவு 16-ல் குறிப்பிட்டபடி, சீராய்வின்போது, வாடிக்கையாளர் கூர்ந்த கவன நடைமுறைகளைச் செயல்படுத்திடும். குறைந்த நேரிடர் உடைய வாடிக்கையாளரைப் பொறுத்தவரை அவர்களின் நிலைப்பாட்டில் (முகவரி அடையாளம்) மாற்றம் ஏதுமில்லாதபட்சத்தில் அவர்களின் சுய உறுதிமொழியே போதுமானது.

(ii) சட்டப்பூர்வ அமைப்புகளைப் பொறுத்தவரை, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள், கணக்குத் தொடங்கும்போது பெற்றுக்கொண்ட ஆவணங்களின் புதிய சான்றுரைக்கப்பட்ட நகல்களைப் பெற்று சீராய்வு செய்திடும்.

b) கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்கள் தங்களின் மெய்மைத் தன்மையை நிரூபிக்கும் பொருட்டு நேரில் வரவேண்டும் என்று கருதுவதற்கு சரியான காரணங்கள் இருந்தாலன்றி, அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணங்கள் சமர்ப்பிக்கவோ, அவற்றை ஆன்-லைனில் ஆதார் சோதித்தறியும் பொருட்டோ அல்லது ஆன்-லைனில் செய்யவோ வாடிக்கையாளர் நேரிடையாக வரவேண்டும்

என்று ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் வலியுறுத்தாது. வழக்கமாக அலுவலக ரீதியாக மதிப்புடைய ஆவணம் / ஒப்புதல் ஆகியவற்றை வாடிக்கையாளர் மின்னஞ்சல் வழியாக அல்லது தபாலிலோ அனுப்பலாம். அது ஏற்றுக்கொள்ளத் தக்கது.

c) KYC-ன் தொடர் திருத்த சீராய்வு நடத்தப்பட்டதன் அடையாளமாக, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள், ஆய்வு முடிந்தபின் அதற்கான ஒப்புகையை தேதியிட்டு வைத்திருக்கவேண்டும்.

d) மேலே குறிப்பிடப்பட்ட கால அளவு என்பது, கணக்குத் தொடங்கப்பட்ட அல்லது கடந்த KYC சோதனை நடத்தப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

39. நடப்பிலிருக்கும் வாடிக்கையாளர்களிடமிருந்து ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் வருமானவரிக் கணக்கு எண் அல்லது படிவம் எண் 60-ஐ, மத்திய அரசு அவ்வப்போது அறிவிக்கும் தேதிக்குள் பெற்றுக்கொள்ளும். அவ்வாறு வாடிக்கையாளர்கள் சமர்ப்பிக்கத் தவறினால், அவை சமர்ப்பிக்கப்படும் நாள் வரை கணக்குகளில் பரிவர்த்தனைகளை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம்.

இவ்வாறு தற்காலிகமாக பரிவர்த்தனைகளை நிறுத்தி வைப்பதற்கு முன்பாக, வாடிக்கையாளருக்கு இது குறித்த அறிவிப்பினை அனுப்பி, அவர் தரப்பினைக் கேட்டறிய நியாயமான வாய்ப்பினையும் நல்கிடவேண்டும். காயம் அல்லது அடி பட்டு, நோயுற்று, வயதானதால் அல்லது இது போன்ற காரணங்கால் வருமானவரிக் கணக்கு எண் அல்லது படிவம் 60-ஐ சமர்ப்பிக்க முடியாதவர்களுக்காக, விதிமுறைகளைத் தளர்த்திட, கணக்குப் பரிவர்த்தனைகளைத் தொடர்ந்திட வழிசெய்யும் அம்சங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின் உள்ளகக் கொள்கையில் இருந்திடவேண்டும். இருப்பினும், இத்தகு கணக்குகள் அதிகமான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படும்.

ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் கணக்கு சார்ந்த தொடர்பினைக் கொண்டுள்ள ஒரு வாடிக்கையாளர், தனது வருமானவரிக் கணக்கு எண் அல்லது படிவம் 60-ஐ சமர்ப்பிக்க விருப்பமில்லையென்று, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பிடம் எழுத்துப் பூர்வமாக தெரிவிப்பாரானால், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு அவரின் கணக்கை முடித்து, அது தொடர்பாக கொடுக்கப்படவேண்டிய தொகையை, வாடிக்கையாளர்களின் உரிய அடையாள ஆவணங்களைப் பெற்றுக்கொண்டு தந்துவிடும்.

**விளக்கம்:** இந்த பிரிவைப் பொறுத்தவரை, “தற்காலிக நடவடிக்கை நிறுத்தம்“ என்பது கணக்குத் தொடர்பான அனைத்துப் பரிவர்த்தனைகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் என்பதாகும். வாடிக்கையாளர் இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட

நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் வரை இந்த நிறுத்தம் தொடர்ந்திடும். கடன் கணக்குகள் இந்த வகையைச் சார்ந்தவையானால், நிறுத்தப்பட்ட காலகட்டத்தில் அதில் வரவுகள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

## பிரிவு –VI

## மிகையான மற்றும் எளிய கூர்ந்த கவன நடமுறைகள்

### A. மிகையான கூர்ந்த கவனம்

### 40. நேருக்கு நேர சந்திப்பில்லாத வாடிக்கையாளர்களின் கணக்குகள்

ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் இத்தகு வாடிக்கையாளரின் கணக்கில் செய்யப்படும் முதல் பணம் செலுத்தும் பரிவர்த்தனை என்பது, அடுத்த ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின் KYC பூர்த்தி செய்யப்பட்ட கணக்கிலிருந்து செய்யப்பட வேண்டும். இதன் மூலம் நேருக்கு நேர் சந்திக்காத வாடிக்கையாளரின் அடையாளம் குறித்த மிகையான கூர்ந்த கவனம் உறுதிசெய்யப்படும்.

### 41. அரசியல் ரீதியாக படுநிலையில் உள்ள நபர்கள் (PEPs)

ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் அரசியல் ரீதியாக படுநிலையில் உள்ள நபர்களுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

(a) இத்தகு நபர்கள் குறித்த போதுமான தகவல், அவர்களின் குடும்ப அங்கத்தினர்கள், நெருங்கிய உறவினர்களின் கணக்குகள், நிதி ஆதாரங்கள் ஆகியவை குறித்து ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் அறிந்திருக்கவேண்டும்.

(b) அவரின் அடையாளம் சோதித்திறியப்பட்ட பின் அவரை வாடிக்கையாளராக ஏற்கவேண்டும்.

(c) வாடிக்கையாளர் ஏற்புக் கொள்கையின் அடிப்படையில் PEPs-ஐ வாடிக்கையாளராக ஏற்றுக்கொள்ளும் முடிவினை ஒரு முதுநிலை அதிகாரி எடுக்கவேண்டும்.

(d) தொடரும் அடிப்படையில் இத்தகு கணக்குகள் மிகையான கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

(e) நடைமுறையிலுள்ள ஒரு வாடிக்கையாளர் அவரது ஒரு கணக்கின் பயனாளி உரிமையாளர் PEP-ஆக மாறும்போது, அவருடனான வர்த்தக உறவு முறையை தொடர்ந்திட உயர்நிலை மேலாண்மை அதிகாரிகளின் அனுமதி தேவை.

(f) வாடிக்கையாளர் கூர்ந்த கவன நடைமுறைகளுடன் PEP-க்கு உரிய மிகையான கண்காணிப்பும் தொடர் அடிப்படையில் இத்தகு கணக்குகளுக்குப் பொருந்தும்.

B. இந்த அறிவுறுத்தல்கள், PEP பயனாளி உரிமையாளராக உள்ள கணக்குகளுக்கும் பொருந்தும்.

## 42. வாழ்க்கைத் தொழிலராக உள்ள இடையீட்டாளர்கள் தொடங்கிடும், அவர்தம் வாடிக்கையாளர் கணக்குகள்

வாழ்க்கைத் தொழிலர்கள் மூலமாக கணக்குகள் தொடங்கப்படும்போது ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் பின்வருவனவற்றை உறுதிசெய்திடவேண்டும்.

a) ஒரு தனி வாடிக்கையாளருக்காக அவர் சார்பில் வாழ்க்கைத்தொழிலர் கணக்குகள் தொடங்கினால், அத்தகு கணக்குதாரர் அடையாளம் சரிபார்க்கப்படும்.

b) பரஸ்பர நிதியம், ஓய்வூதிய நிதியம் அல்லது இது போன்ற அமைப்பிற்காக, தொழில்முறை இடையீட்டாளர்கள் மேலாண்மை செய்யும் வகையில் தொடங்கப்படும் கணக்குகளை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் “ஒருங்கே சேர்க்கப்பட்ட“ கணக்குகளாக அவற்றைத் தொடங்கி தம்வசம் வைத்திருக்கலாம்.

c) தனது வாடிக்கையாளர் குறித்த தகவல்களை வெளிப்படையாக தெரிவிக்க முடியாதபடி கமுக்கமாக வைத்திருக்கும்படியான நிலையில், தொழில்முறை இடையீட்டாளர் இருப்பாரானால், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் அத்தகு வாடிக்கையாளர்களுக்கான கணக்குகளைத் தொடங்க அனுமதி மறுக்கலாம்.

d) இடையீட்டாளர்கள் தொடங்கும் கணக்குகள் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் தளத்தில் இணைத்து கலக்கப்படும் நிலையில் இல்லாவிட்டால், அத்தகு கணக்குகளின் பயனாளி சொந்தக்காரர்கள், தனித்தனியே அடையாளம் காணப்படும்படி வகைசெய்யப்படவேண்டும். ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளின் தளத்தில் அவை இணைத்துக் கலக்கப்படும் நிலையில் இருந்தால், பயனாளி சொந்தக்கரார்களை, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் தனித்தனியே கவனம் செலுத்தித் தெரிந்துகொள்ளவேண்டும்.

e) வாடிக்கையாளர் கூர்ந்த கவன நடைமுறைகளைப் பின்பற்றி ஒரு இடையீட்டாளர் மேற்பார்வைக்கு உட்பட்ட அமைப்பானால், மேலும் அந்த இடையீட்டாளர் KYC தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறைமையை நடப்பில் வைத்திருப்பவரானால்,

ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் அத்தகு இட்டையீட்டாளர் தொடங்கிடும் கணக்குகள் குறித்த கூர்ந்த கவன நடைமுறைகளைத் தம் விருப்பத்தின் பேரில் நம்பி செயல்படலாம்.

f) ஆயினும், வாடிக்கையாளரை அறிந்துகொள்ளும் பொறுப்பு இறுதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பையே சாரும்.

**B. எளிமையாக்கப்பட்ட கூர்ந்த கவன நடைமுறை**

**43. சுயஉதவிக் குழுக்களுக்காக சுலபமாக்கப்பட்ட கொள்கைகள்**

a) சுய உதவிக்குழுக்களுக்காக கணக்கு தொடங்கும்போது குழு உறுப்பினர்கள் அனைவர் தொடர்பான கூர்ந்த கவன நடைமுறைகள் பின்பற்றப்பட அவசியமில்லை.

b) குழுக்களின் அலுவலகப் பொறுப்பிலுள்ள உறுப்பினர்களின் கூர்ந்த கவன நடைமுறைகளைக் கவனித்தால் மட்டுமே போதுமானது.

c) சுய உதவிக் குழுக்களை, உறுப்பினர்களுடன் கடனுதவிக்காக இணைக்கும்போது, அக்குழுவின் மேலாண்மை இயக்குநர் அல்லது நிர்வாகப் பொறுப்பிலுள்ள உறுப்பினர்களின் கூர்ந்த கவன நடைமுறை அல்லது சட்டப்பிரிவு எண் 16-ல் குறுப்பிடப்பட்ட சிறப்புக் கூர்ந்த கவன நடைமுறைகளைப் பின்பற்றத் தேவையில்லை.

**44. அயல்நாட்டு மாணவர்களுக்காக கணக்குகள் தொடங்கும்போது வங்கிகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

a) அயல்நாட்டினரின் சாதாரண (NRO) கணக்கை ஒரு வங்கி மாணவர் சார்பில் தொடங்கும்போது பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொள்ளலாம். மாணவரின் பாஸ்போர்ட், விசா மற்றும் அவரை நாட்டுக்குள் அனுமதிக்கும் அதிகாரியின் முத்திரை ஆகியவற்றுடன் உள்நாட்டில் அவரின் முகவரி, புகைப்படம், இந்தியாவிலுள்ள கல்வி நிறுவனம் அவருக்கு அனுப்பிய சேர்க்கை அனுமதிக் கடிதம். இவையாவும் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டவை.

i) கணக்கு தொடங்கப்பட்ட 30 நாட்களுக்குள் உள்நாட்டு முகவரி குறித்த உறுதிச் சான்றிதழ் மாணவரால் அளிக்கப்படவேண்டும். அந்த முகவரி சோதித்தறியப்படும்.

ii) முகவரி சோதித்தறியப்படும் கால வரையறைக்குள் கணக்கில் அயல்நாட்டுப்பணம் மொத்தமாக அமெரிக்க டாலர் 1000 வரை மட்டுமே அனுமதிக்கப்படும். இந்தியப் பணத்தில் வரவு செலவுகள் மொத்தமாக ரூ. 50,000 வரை மட்டுமே 30 நாட்களுக்குள் அனுமதிக்கப்படும். இந்த நிபந்தனைக்கு உட்பட்டே கணக்கு தொடங்கி இயக்கப்படும்.

b) எல்லா NRO கணக்குளைப் போலவே, இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் FEMA 1999-ன் ஷரத்துகளுக்கு உட்பட்டு இந்த NRO கணக்கும் நடத்தப்படும்.

c) பாகிஸ்தான் நாட்டு மாணவருக்காக கணக்கு தொடங்கப்பட வேண்டுமானால், இந்திய ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி தேவை.

## 45. அயல்நாட்டு பட்டியல் முதலீட்டாளர்களுக்கான சுலபமாக்கப்பட்ட KYC கொள்கைகள்

பட்டியல் முதலீட்டுத் திட்டத்திற்காக, இதன்பொருட்டு செபியில் (SEBI) பதிவு செய்யப்பட்ட, தகுதியுள்ள அயல்நாட்டு முதலீட்டாளர், கணக்குகளைத் தொடங்கும்போது பின்னிணைப்பு 11-ல் விரிவாகக் குறிப்பிட்டுள்ளபடி KYC ஆவணங்களை வருமானவரி (FATCA/CRS) விதிகளுக்கு உட்பட்டு பெற்றுக்கொள்ளவேண்டும்.

இத்துடன் கூடவே, அயல்நாட்டுப்பட்டியல் முதலீட்டாளர் அல்லது அவர் சார்பில் செயல்படும் உலக அளவிலான பாதுகாப்பாளரிடமிருந்து ஒரு உறுதிமொழிக் கடிதத்தைப் பெறவேண்டும். பின்னிணைப்பு 11-ல் விலக்களிக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் தேவைப்படும்பட்சத்தில் அவற்றை சமர்ப்பிக்கிறேன் என்ற அந்த உறுதிமொழிக் கடிதம் தரப்படவேண்டும்.

## அத்தியாயம்– VII
## பதிவேடுகள் மேலாண்மை

46. கருப்புப் பணச் சலவைத் தடுப்புச் சட்டம் மற்றும் விதிகளின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, வாடிக்கையாளர் கணக்கு குறித்த விவரம், அதன் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அறிக்கை அளித்தல் தொடர்பான பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் பின்வருமாறு செயல்படும்.

a) கணக்குப் பரிவர்த்தனை தொடங்கிய நாளிலிருந்து குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் வரையிலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பிற்கும் வாடிக்கையாளருக்கும் இடையிலான பரிவர்த்தனைகள் (இந்தியாவிற்குள்ளும், அயல்நாடுகளுக்கு இடையேயும்) குறித்த முக்கிய பதிவுகளை பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

b) வாடிக்கையாளர் அளித்த முகவரித் தகவலை, கணக்கு தொடங்கிய நாளிலிருந்து கணக்கு நடத்தப்பட்ட காலம் வரையிலும், கணக்கு முடிந்தபின் ஐந்தாண்டுகள் வரையிலும் பத்திரமாக பாதுகாத்து வைக்கவேண்டும்.

c) உரிய சட்டப்பூர்வ அதிகாரி வேண்டிடும் நேரங்களில், வாடிக்கையாளரின் அடையாளம் குறித்த பதிவுகள் மற்றும் பரிவர்த்தனைத் தகவல்களை அவருக்கு அளிக்க வேண்டும்.

d) பணச்சலவை தடுப்பு (பதிவேடுகள் பராமரிப்பு) விதிகள் 2005-ல் விதி எண் 3-ல் குறிப்பிடப்பட்ட முறையான பதிவேடுகள் பராமரிப்பிற்கான முறைமையை அறிமுகப்படுத்தி அமல்படுத்திடவேண்டும்.

e) பணச்சலவை தடுப்புச் சட்ட விதிகளில் விதி எண் 3-ல் குறிப்பிட்ட வகையிலான பரிவர்த்தனைகள் குறித்த அனைத்து விவரங்களையும் சரியான வகையில் பராமரித்து வைக்கவேண்டும். இதனால், தனியொரு பரிவர்த்தனை குறித்த பின்வரும் எந்த தகவலையும் தெரிந்துகொள்ளமுடியும்.

(i) பரிவர்த்தனையின் இயல்பு / வகை.
(ii) பரிவர்த்தனையின் தொகை, எந்த நாட்டுப் பணத்தில் (ரூபாய் / அயல்நாட்டு நாணயம்) செய்யப்பட்டது.
(iii) பரிவர்த்தனை நிகழ்ந்த தேதி.
(iv) பரிவர்த்தனை தொடர்பான நபர்கள்.

f) கணக்கு தொடர்பான விவரங்கள், எந்த நேரத்திலும் விரைவாக மீட்டெடுத்து அறிந்துகொள்ளும் வகையில், உரிய அதிகாரிகள் வேண்டிடும்போது, அவற்றைச் சமர்ப்பிக்க ஏதுவாக, அந்த தகவல்கள் சரியான முறையில் பாதுக்காக ஒரு முறைமை நடப்பில் இருக்கவேண்டும்.

g) விதி எண் 3-ல் குறிப்பிடப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான கணக்குகள், பரிவர்த்தனைகளுக்கு உரிய, வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் முகவரி தகவல்களுக்கான பதிவேடுகள் மென் பொருளாக கணினியிலோ அல்லது பதிவேடுகளாகவோ பராமரித்து வைக்கப்படலாம்.

## அத்தியாயம்– VIII

## நிதியியல் புலனாய்வு அமைப்பு – இந்தியா (FIU-IND)

47. பணச்சலவை தடுப்பு (பதிவேடுகள் பராமரிப்பு) விதிகள் 2005-ல் விதி எண் 3-ல் குறிப்பிடப்பட்ட பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல்களை, ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் நிதியியல் புலனாய்வு அமைப்பின் இயக்குநருக்கு விதி எண் 7-ல் பரிந்துரைத்தப்படி சமர்ப்பிக்கவேண்டும்.

**விளக்கம்**: செப்டம்பர் 22, 2015 தேதியிட்ட திருத்தப்பட்ட (மூன்றாம்) விதிகளின்படி, உபவிதி எண் 3, 4 (7), நிதியியல் நுண்ணறிவு அமைப்பு – இந்தியாவின் இயக்குநருக்குச் சில அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. விதி எண் 3, உபவிதி (1)-ன் ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிவர்த்தனைகளை,ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் கண்டுபிடிக்கவும், அவை குறித்த விவரங்களை எந்த வடிவில், எவ்வாறு, எந்த செயல்முறைப்படி அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தவும், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளுக்கு வழிகாட்டுதல்கள் அளிக்கும் அதிகாரம் நிதியியல் நுண்ணறிவு அமைப்பிற்கு உண்டு.

48. நிதியியல் புலனாய்வு அமைப்பு-இந்தியா, அறிக்கை சமர்ப்பிக்கும் படிவங்கள், முறைகள் குறித்தும், அறிக்கை தோற்றுவிக்கவும், அதை மதிப்பூட்டிடவும், முறைகளை வகுத்து வைத்துள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவும். இவற்றில் மின்னணு வடிவில் திருத்தங்கள் செய்திடும் வழிமுறைகளும் உள்ளன. பணப் பரிவர்த்தனைகள் குறித்த அறிக்கைகள் (CTR), சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனை குறித்த அறிக்கை (STR) படிவங்கள், திருத்தத்திற்கு ஏதுவாக உள்ள தொழில்நுட்பத்துடன் வழங்கப்பட்டுள்ளன. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு அறிக்கைகளை சமர்ப்பிக்கலாம். முழுமையாக கணினிமயமாக்கப்படாத ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் தத்தம் கிளைகளுக்கு இத்தகு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி,

பரிவர்த்தனைகளைத் தேடி எடுத்து இணையவழியாக அறிக்கைகளை சமர்ப்பிக்க அறிவுறுத்தலாம். இதனால், தனியாக மின்னணு வடிவில் கோப்புகளை தயாரித்து அறிக்கைகளை கணினிவழி சமர்ப்பிக்கலாம். இதற்கு http://fiuindia.gov.in. என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

49.நிதியியல் புலனாய்வு அமைப்பு – இந்தியாவின் இயக்குநருக்குத் தகவல் அல்லது அறிக்கை சமர்ப்பிக்கும்போது ஒரு பரிவர்த்தனை குறித்த தகவலை அதற்குரிய காலவரையறையைத் தாண்டி சமர்ப்பிப்பதில் தாமதிக்கும் ஒவ்வொரு நாள், அல்லது தவறாக சித்தரிக்கப்பட்ட பரிவர்த்தனை அறிக்கையில் திருத்தம் செயது சமர்ப்பிப்பதில் தாமதிக்கும் ஒவ்வொரு நாள் ஆகியவை தனிப்பட்ட விதி மீறலாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும். STR (சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனை அறிக்கை) சமர்ப்பிக்கப்பட்டபின், தொடர்புடைய கணக்குகளின் செயல்பாடுகள் மீது எந்தவிதமான கட்டுப்பாடுகளும், பரிவர்த்தனைகள் மீது வரையறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் விதிக்கக்கூடாது. STR சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் விவரங்கள் முற்றிலும் ரகசியமாக வைக்கப்படவேண்டும். எந்த நிலையிலும்,எந்த வகையிலும் வாடிக்கையாளருக்கும் இந்த தகவல் தெரிவிக்கப்படக்கூடாது.

50. சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகளைத் திறமையுடன், உடனுக்குடன் அடையாளம் காணவும், அதை அறிவிக்கவும் ஏதுவாகச் சிறந்த வலிமையான மென்பொருள் முறைமை நடப்பிலிருக்க வேண்டும். இதனால் நேரிடர் ஏற்படுத்தும் சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனைகளை (வகைக்குப் பொருந்தாத முறையில் நடத்தப்படும்) எச்சரிக்கை அறிவிப்புகளைக் கொண்டு அடையாளம் காணவும், வாடிக்கையாளர் தகவல்களை சீரான கால இடைவெளியில் திருத்தி அமைக்கவும், இந்த மென்பொருள் வழிவகை செய்யும்.

## அத்தியாயம்–IX

## பன்னாட்டு ஒப்பந்தங்களின் கீழ் பொறுப்புகள் / தேவைகள் பன்னாட்டு முகமைகளிடமிருந்து தொடர்பு விவரங்கள்

51. பன்னாட்டு பாதுகாப்பு அமைப்பு (UNSC) அவ்வப்போது, அங்கீகரித்து ஒரு பட்டியலை சுற்றுக்காக வெளியிடுகிறது. இதில் உலகெங்கிலும் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புடைய அல்லது இதற்காக சந்தேகத்திற்குரிய நபர்கள் / குழுக்களின் பெயர்கள் வெளியிடப்படுகிறது. இதில் குறிப்பிடப்பட்டவர்களின், பெயர்களில் கணக்குகள் தொடங்கப்படவில்லை என்பதை “சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (UAPA) 1967-ன்“ சட்டப் பிரிவு 51A-ன்படி ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் உறுதி செய்திடவேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட அந்த இரு பட்டியல் குறித்த விவரங்கள் இதோ –

a) **“ISIL (Da’esh) & Al-Qaida List” –** இந்தப்பட்டியலில், அல்கொய்தா அமைப்புடன் தொடர்புடைய தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் பெயர்கள் உள்ளன. அவ்வப்போது திருத்தப்பட்ட பட்டியல் https://scsanctions.un.org/fop/fop?xml=htdocs/resources/xml/en/consolidated.xml&xslt=htdocs/resources/xsl/en/al-qaida-r.xsl - என்ற இணையத்திலுள்ளது.

b) **1988 அனுமதிக்கப்பட்ட பட்டியல்–**தனிநபர்களின் பெயர்கள் (முழுப்பட்டியலில் பிரிவு-A) அமைப்புகளின் பெயர்கள் (பிரிவு-B) தாலிபன் அமைப்புடன் தொடர்புடையவர்கள். இது https://scsanctions.un.org/fop/fop?xml=htdocs/resources/xml/en/consolidated.xml&xslt=htdocs/resources/xsl/en/taliban-r.xsl - என்ற இணையத்திலுள்ளது.

52.மார்ச் 14, 2019 தேதியிட்ட UAPAஅறிவிக்கையின்படி, மேற்கண்ட பட்டியலில் உள்ளவர்களைப் போல (நினைவூட்டக்கூடிய பெயர்களில்) தோற்றமளிக்கும் பெயர்களில் உள்ள கணக்குகளைப் பற்றிய விவரமான தகவலை, நிதியியல் புலனாய்வு அமைப்பு – இந்தியா இயக்குநருக்கு மட்டுமன்றி, உள்துறை அமைச்சகத்திற்கும் அறிவிக்கவேண்டும்.

53. மேற்குறிப்பிட்ட பட்டியல்களைத் தவிர, இந்திய ரிசர்வ் வங்கி வேறு ஆட்சி எல்லைகள்/அமைப்புகளில் உள்ளவர்கள் பற்றி வெளியிடும் UNSCRs சந்தேகத்திற்குரிய அமைப்புகள் நபர்கள் பற்றிய பட்டியலையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### 54. சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (UAPA) 1967-ன் பிரிவு எண் 51A-ன் கீழ் சொத்துக்களை முடக்குதல்

இச்சட்டத்தின் கீழ் மார்ச் 14, 2019-ல் வெளியிடப்பட்ட செயல்முறையை(இந்த மூலச்சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 1-ல் உள்ளது) முறையாகப் பின்பற்றி, இந்த அரசின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்திடவேண்டும்.

### 55. FATF பரிந்துரைகளைப் பூர்த்தி செய்யாத அல்லது முழுமையாகப் பூர்த்தி செய்யாத ஆட்சிப்பரப்பெல்லைகள்

a) FATF பரிந்துரைகளைச் செயல்படுத்தாத அல்லது முழுமையாக செயல்படுத்தாத நாடுகளைத் தெரிந்துகொள்ள அவ்வப்போது இந்திய ரிசர்வ் வங்கி வெளியிடும்

FATF அறிக்கைகளைக் கவனத்தில் கொள்வது நலம். பணச்சலவைத் தடுப்புச் சட்டம் / தீவிரவாதத்திற்கு நிதி ஆதரவு தரும் நாடுகளின் ஆட்சி எல்லையின் கீழ் உள்ளவை.

b) FATF பரிந்துரைகளைப் பூர்த்தி செய்யாத, அல்லது முழுமையாக பூர்த்திசெய்யாத நாடுகளில் உள்ள நபர்களுடன் (சட்டரீதியான நபர், இதர நிதி நிறுவனங்கள் உட்பட) உள்ள வர்த்தக தொடர்புகள், பரிவர்த்தனைகள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்படும். இவற்றின் பட்டியலும் FATF அறிக்கைகளில் உள்ளது.

**விளக்கம்:**சட்டப்பிரிவு 55 a & b-ல் கூறப்பட்டுள்ள நடைமுறை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள்,FATF அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகள் மற்றும் ஆட்சி எல்லைகளில் நியாயமான வர்த்தக பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதைத் தடுப்பதில்லை.

c) FATF அறிக்கையின்படி அதன் பரிந்துரைகளை முழுமையாகவோ, அல்லது பகுதியளவிலோ ஏற்று நடக்காத நாடுகள் அல்லது ஆட்சி எல்லைகளில் உள்ள நபர்களுடன் (சட்டரீதியான நபர் அமைப்புகள், நிதிநிறுவனங்கள் உட்பட)ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் கொண்டுள்ள பரிவர்த்தனைகளின் பின்புலம், நோக்கம் ஆகியவை ஆய்வு செய்யப்படும். இது குறித்த எழுத்துப் பூர்வமான கண்டுபிடிப்புகள், உரிய ஆவணங்களுடன் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு, இந்திய ரிசர்வ் வங்கி அல்லது இதர அதிகார அமைப்புகள் வேண்டும்போது கொடுக்கப்படவேண்டும்.

## அத்தியாயம்–X
## இதர அறிவுறுத்தல்கள்

### 56. ரகசியக் காப்பு பொறுப்பு மற்றும் தகவல் பகிர்வு

a. வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான ஒப்பந்த அடிப்படையிலான உறவுமுறையில், வாடிக்கையாளர் குறித்த தகவலை வங்கிகள் ரகசியமாகப் பாதுகாத்து வைப்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

b. வாடிக்கையாளர் கணக்கு தொடங்கும்போது, வங்கிகள் அவர்களிடம் சேகரித்த தகவல்களை அவர்தம் உரிய அனுமதியின்றி, மூன்றாம் நபர்களுக்கு பல்வேறு

பொருட்களின் விற்பனைக்காகவோ, இதர நோக்கங்களுக்காகவோ அளிக்கக்கூடாது.

c. அரசாங்கம் அல்லது இதர முகமைகள் வாடிக்கையாளர் தகவல்களை வங்கியிடம் கோரலாம். அல்லது கோரப்படும் தகவலைத் தருவதால், வங்கிப் பரிவர்த்தனைகளின் தகவலை ரகசியம் காத்தல் குறித்த சட்ட விதிகள் மீறப்படவில்லை என்பதை உறுதி செய்துகொண்ட பின்னரே வங்கிகள் தகவல்களை அளிக்கும்.

d. இந்த விதிக்கான விலக்குகள் பின்வருமாறு –

(i) சட்டத்தின் வற்புறுத்தலால் இவ்வாறு தகவல் கோரப்படுகிறது.
(ii) பொதுமக்களுக்குத் தகவலை அளிப்பது கடமையாக ஆகும்போது.
(iii) வங்கியின் நலன் கருதி அவ்வாறு தகவல் அளிக்கக் கோரும்போது.
(iv) வாடிக்கையாளர் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ தகவலை அளித்திட அனுமதி அளித்திருக்கும்போது.

e. வங்கிசாரா நிதி நிறுவனங்கள் தங்கள் வாடிக்கையாளர் குறித்த தகவலின் ரகசியக்காப்பை இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம் 1934-ன் பிரிவு 45 NB-ல் குறிப்பிட்டபடி பின்பற்றவேண்டும்.

## 57. மைய KYC பதிவேடுகளிலிருந்து தகவல் பகிர்வு மற்றும் கூராய்ந்த கவன வாடிக்கையாளர் (CDD) நடைமுறைகள்

விதிகளில் குறிப்பிட்டபடி ஒழுங்குபடுத்தப்பட்டஅமைப்புகள் மைய KYC பதிவேடுகளில் பதிவு செய்யவும், தகவல் பகிரவும், KYC தேவைகளை தனிநபர்களுக்கும் சட்டப்பூர்வ அமைப்புகளுக்கும் உரியமுறைப்படி சேகரித்து வைக்கும். மைய (CKYCR) பதிவாளராக செயல்படும் அதிகாரத்தை அரசிதழ் அறிக்கை எண் S.O. 3183 (E)-ன் (நவம்பர் 26, 2015தேதியிட்டதன்) வாயிலாக இந்திய அரசாங்கம் CERSAI-க்கு அளித்துள்ளது.

ஜூலை 15, 2016 முதல் CKYCR படிப்படியாக புதிய தனிநபர் கணக்குகளைக் கொண்டு, பதிவேடுகளின் பதிவுகளைத் தொடங்கி செயல்பட ஆரம்பிக்க வேண்டும். இதன் பொருட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

(i) கருப்புப் பணச் சலவை தடுப்பு (பதிவேடுகள் பராமரிப்பு) விதிகள் 2005-ன்படி, பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் (SCB) ஜனவரி 1, 2017-க்குப் பின்னர் தொடங்கப்பட்ட, புதிய தனிநபர் கணக்குளைப் பற்றிய KYC தகவல்களை CERSAI-யிடம் பதிவு செய்துகொள்ளவேண்டும். ஆயினும், ஜனவரி 2017-ல் SCB-ல் தொடங்கப்பட்ட கணக்குகள் குறித்த KYC தகவல்களை, கணினியில் மேலேற்ற பிப்ரவரி 1, 2017 வரை கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

(ii) கருப்புப் பணச் சலவைத் தடுப்பு (பதிவேடுகள் பராமரிப்பு) விதிகள் 2005-ன்படி, பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் (SCB) அல்லாத ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளில் ஏப்ரல் 1, 2017 அன்றும் அதற்குப் பின்னரும் தொடங்கப்படும் புதிய தனிநபர் கணக்குகளின் KYC தகவல்கள் CERSAI-யிடம் பதிவு செய்யப்படவேண்டும்.

(iii) KYC தகவலை கணினி மேலேற்றம் செய்திட உரிய நடைமுறை வழிகாட்டுதல்களை CERSAI வெளியிட்டுள்ளது. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளின் பயன்பாட்டிற்காக "சோதனை சூழல்" அமைப்பும் CERSAI மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 58. FATCA மற்றும் பொதுவான அறிக்கை தரநிலைகள் (CRS) ஆகியவற்றின் கீழ் அறிக்கை அளிக்கும் தேவைகள்

FATCA மற்றும் CRS-ன் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள்,வருமான வரி விதிகள் 114F, 114G மற்றும் 114H-ன் ஷரத்துக்களின்படி நிபந்தனைகளை ஏற்று 114F-ன்படி அறிக்கை அளிக்கவேண்டிய நிதியியல் நிறுவனமா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளும். அவ்வாறாயின், இதன் பொருட்டு அறிக்கை அளித்திட பின்வரும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

(a) வருமானவரித் துறையின் e-ஃபைலில் போர்ட்டலில் ஒரு அறிக்கை அனுப்பும் நிதியியல் நிறுவனமாக உரிய இணைப்பில் பதிவு செய்துகொள்ளவும். https://incometaxindiaefiling.gov.in/ post login - -> My Account → Register as Reporting Financial Institution.

(b) நியமிக்கப்பட்ட இயக்குநரின் டிஜிட்டல் கையொப்பத்தைப் பயன்படுத்தி, ஆன்லைனில் அறிக்கையை அனுப்ப வேண்டும். படிவம் எண் 61B அல்லது "NIL" அறிக்கையை அனுப்பலாம். இதன்பொருட்டு, நேரடி வரிகளின் மைய வாரியம் (CBDT) தயாரித்துள்ள திட்டத்தைப் பார்க்கவும்.

**விளக்கம்:** விதி எண் 114H-ன்படி, அறிக்கை அளிக்கவேண்டிய கணக்குகளின் தொகையை அடையாளம் கண்டுகொள்ள, கூர்ந்த கவன நடைமுறையை செயல்படுத்தவும், உரிய அந்நியச் செலாவணி மாற்று மதிப்பீடுகளை அறியவும், இந்திய அந்நியச் செலாவணி வர்த்தகர்கள் சங்கம் வெளியிடும் செலாவணிமாற்று விகிதங்களைப் பார்த்துக் கணக்கிடலாம்.

(c) விதி எண் 114H-ன்படி கூராய்ந்த கவன நடைமுறைக்காகவும், தகவல் பதிவு செய்து, பராமரிக்கத் தகவல் தொடர்பு தொழில்நுட்ப வரையுருவைத் தயாரித்து வைத்திருக்கவேண்டும்.

(d) தகவல் தொழில்நுட்ப வரையுருவினை உரிய வகையில் தணிக்கை செய்யும் முறைமையை வருமான வரி விதிகள் 114F, 114G மற்றும் 114H-ற்கு ஏற்றபடி தயாரித்து வைத்திருக்கவேண்டும்.

(e) இதன்பொருட்டு, நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்திட, உயர்மட்ட கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்ட இயக்குநரின் கீழ் அமைக்கப்பட வேண்டும். அல்லது அந்த நிலையில் உள்ள அதிகாரியின் பொறுப்பில் இதை விடவேண்டும்.

(f) அவ்வப்போது நேரடி வரிகளின் மையம் மற்றும் இப்பொருள் குறித்து திருத்தி வெளியிடும் அறிவுறுத்தல்கள் / விதிகள் / வரிகள் மற்றும் குறிப்புகள் / பத்திரிக்கை வெளியீடுகள்ஆகியவை http://www.incometaxindia.gov.in/Pages/default.aspx. என்ற இணையதளத்தில் உள்ளது. ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் கீழ்க்கண்டவற்றை கவனத்தில் கொள்ளவேண்டும்.

(i) விதி FATCA மற்றும் CRS குறித்த திருத்தப்பட்ட வழிகாட்டிக் குறிப்பு.

(ii) விதி எண் 114H (8)-ன் கீழ் நிதியியல் கணக்குகளை முடிப்பது குறித்த பத்திரிக்கை வெளியீடு.

**59. செலாவணி முறிகளைச் சமர்ப்பிக்கக் கால அவகாசம்**

வங்கிகளின் கொடுப்பாணை / காசோலைகள், வரைவோலைகள் அவற்றில் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கழித்துச் சமர்ப்பிக்கப்பட்டால், அவற்றிற்குரிய தொகை கொடுக்கப்படமாட்டாது.

60. **வங்கிக் கணக்குகளின் செயல்பாடு மற்றும் 'பணக் கழுதைகள்'**

கணக்குத் தொடங்குதல் மற்றும் பரிவர்த்தனைகளைக் கண்காணித்தல் குறித்த அறிவுறுத்தல்கள் முறையாக கடைபிடிக்கப்படவேண்டும். இதனால், மோசடியாகக் கணக்குகள் தொடங்கி, மூன்றாம் நபர்களின் மூலமாக **'பணக் கழுதைகள்'**போன்ற செயல்பாடுகளால் கணக்குகளில் முறைகேடுகள் நடப்பது தவிர்க்கப்படும். ஒரு கணக்கு 'பணக் கழுதைக்காக' தொடங்கி செயல்படுத்தப்பட்டது நிரூபிக்கப்பட்டுவிட்டால், வங்கி உரிய நடைமுறைகளைப் பின்பற்றவில்லை என்று கருதப்படும்.

**61. 'கணக்கு வைத்திருப்பவருக்கு' என்று குறிப்பிடப்பட்ட காசோலைகள் சேகரம்**

கணக்கு வைத்திருப்பவருக்கு என்று குறிப்பிடப்பட்ட காசோலைகள் கொடுக்கப்பட வேண்டிய நபருக்காக அன்றி வேறு ஒருவருக்காக சேகரம் செய்யப்பட மாட்டாது. ஆயினும் கூட்டுறவு கடன் சங்கங்களை வாடிக்கையாளராகக் கொண்டுள்ள வங்கிகள் அவர்கள் பொருட்டு இத்தகு காசோலைகளை சேகரம் செய்ய ஏற்றுக் கொள்ளும். ஆயின் காசோலையின் பணம் கொடுக்கப்பட வேண்டிய நபர் அந்த கூட்டுறவு கடன் சங்கங்களின் தேர்வுரிமையுடையவராக இருக்க வேண்டும்.

62. (a) வங்கிகள் மற்றும் வங்கிசாரா நிதிநிறுவனங்கள் தனிநபர் வாடிக்கையாளருக்கு, வாடிக்கையாளர் தனிநபர் அடையாள எண் (UCIC) ஒன்றை தங்களுடன் தொடர்பு கொள்ளும்போது முதலில் அளித்திடும்.

(b) வங்கிகள் / வங்கிசாரா நிதி நிறுவனங்கள், தங்கள் விருப்புரிமையின் பேரில் வந்துபோகும், எப்போதாவது முன்பணம் செலுத்தும் அட்டைகள், சாதனங்கள் வேறு மூன்றாம் நபரின் பொருட்களை வாங்குவதற்காக வரும் வாடிக்கையாளர்களுக்கு UCIC வழங்காது. ஆனால், இத்தகு வாடிக்கையாளர்களை அடிக்கடி வந்து போகிறவர்களானால், அடையாளம் காண ஏதேனும் வழிவகை இருக்கவேண்டும். அப்போது அவர்களுக்கு UCIC வழங்கப்படுவது உறுதி செய்யப்படவேண்டும்.

**63. புதிய தொழில்நுட்பம் அறிமுகம், கடன் அட்டை / பற்று அட்டைகள் / ஸ்மார்ட் அட்டைகள் / பரிசு அட்டைகள் / மொபைல் வாலட் / இணைய**

**வங்கியியல் / மொபைல் வங்கியியல் / நிகழ்நேர மொத்தத் தீர்வு (RTGS) / NEFT / ECS / IMPS முதலியன**

வளர்ந்துவரும் புதிய தொழில்நுட்பத்தால் புதிய பொருட்கள் / சேவைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தும்போது, அதற்கேற்ப எழக்கூடிய கருப்புப்பணச் சலவை மற்றும் தீவிரவாதத்திற்கு நிதியாதரவு போன்ற அச்சுறுத்தல்களை சமாளிக்கும் வகையில், புதிய முறையான KYC நடைமுறை அமலாக்கம் செய்யப்பட்டு கடைபிடிக்கப்படுகின்றன என்பதை,ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் தக்க கவனத்துடன் கண்காணிக்கவேண்டும். கடன் அட்டைகளைச் சந்தைப்படுத்தும் முகமைகளும், கூராய்ந்த கவன நடைமுறைகளுக்கும்,KYC நடைமுறைகளுக்கும் உட்படுத்தப்படவேண்டும்.

**64. தொடர்பாளர் வங்கிகள்**

வங்கிகள் தொடர்புடைய வங்கிசார் உறவுமுறைகள் குறித்த ஒரு கொள்கையை வகுத்திடவேண்டும். வங்கியின் நிர்வாக மன்றம் அல்லது தலைவர் / தலைமை நிர்வாக அதிகாரி / மேலாண்மை இயக்குநர் தலைமையிலான குழு அதற்கு ஒப்புதல் அளித்திடவேண்டும். இதற்கான தரநிலை அளவீடுகளைக் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு அக்கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

(a) தொடர்பாளர் வங்கியாக செயல்புரிய வந்திடும் வங்கியின் வர்த்தக இயல்பு, மேலாண்மை விவரங்கள், முக்கிய வர்த்தக செயல்பாடுகள் AML / CFT நிபந்தனைகளை நிறைவேற்றும் தன்மை, கணக்கு தொடங்கப்படுவதன் நோக்கம், இச்சேவையை பயன்படுத்த விரும்பும் மூன்றாம் நபர் எவரேனும் இருப்பின் அவரது அடையாளம், அவ்வங்கியின் தாய்நாட்டில் உள்ள நெறிமுறை / மேற்பார்வை சட்ட வரையுரு ஆகிய விவரங்கள் விரிவாக அறியப்படவேண்டும்.

(b) நிர்வாக மன்றம் ஒப்புதல்அளித்திடும் வர்த்தக வரம்புகளுக்கு, தீர்மானங்களுக்கு, , அதனைத் தொடர்ந்திடும் கூட்டத்தில் பின்ஒப்புதல் அளித்திடவேண்டும்.

(c) தொடர்பாளர் வங்கி உறவுமுறை கொண்டுள்ள அனைத்து வங்கிகளின் பொறுப்புகளும் தனித்தனியாக தெளிவாக ஆவணப்படுத்தப்படவேண்டும்.

(d) கணக்குள் வழியாக பட்டுவாடா செயல்படும் நிலையில், தொடர்பாளர் வங்கி, அந்த கணக்குகளுடன் நேரடி தொடர்பு கொண்ட மறுவினையாற்றும் வங்கி,

அக்கணக்குகளின் அடையாளத்தைச் சோதித்தறிந்து, கூர்ந்த கவன நடைமுறைகளைத் தொடர்ந்து கண்காணிக்கிறார் என்பதில் திருப்தியடைந்துவிடும்.

(e) பரிவர்த்தனை கணக்கிற்கு உரிய வாடிக்கையாளரின் அடையாளத் தகவலைக் கோரும்பட்சத்தில், அதை உடனடியாக மறுவினையாற்றும் வங்கி அளித்திடும் என்பதை தொடர்பாளர் வங்கி உறுதி செய்துகொள்ளவேண்டும்.

(f) "மறை ஓடு" வங்கியுடன் 'தொடர்பாளர்' உறவுமுறையை வைத்துக்கொள்ளக் கூடாது.

(g) தொடர்பாளர் வங்கிகள் தங்கள் வசமுள்ள கணக்குகளை "மறை ஓடு" வங்கிகள் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பதில்லை என்பது உறுதிசெய்யப்படவேண்டும்.

(h) இயல்பு புவி நிலையில் குறைபாடுகளுடைய இடங்களிலும் ஆட்சி எல்லைகளிலும் இயங்கிடும் தொடர்பாளர் வங்கிகள் அல்லது FATP பரிந்துரைகளை அமலாக்கம் செய்வதில் போதிய முன்னேற்றத்தைக் காட்டாத தொடர்பாளர் வங்கிகளுடனான செயல்பாட்டில் வங்கிகள் கவனமாக இருக்கவேண்டும்.

(i) மறுவினையாற்றும் வங்கிகள் KYC/AML கொள்கைகள் மற்றும் முறைமைகளை வகுத்து, நன்கு செயல்படுத்தி, கூர்ந்த கவன நடைமுறைகளைத் தங்கள் "தொடர்பாளர் வங்கிகளுடன்" நடத்தும் பரிவர்த்தனைகளில் பின்பற்றுகிறார்கள் என்பதை வங்கிகள் உறுதி செய்துகொள்ளவேண்டும்.

## 65. தந்திவழிப் பணப்பரிமாற்றம்

இத்தகைய பரிமாற்றங்களில் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் பின்வருவனவற்றை உறுதி செய்துகொள்ளவேண்டும்.

(a) கடன் அட்டை / பற்று அட்டையைப் பயன்படுத்தி செயல்படும் பரிவர்த்தனைகள் உட்பட அனைத்துப் பன்னாட்டுத் தந்திவழிப் பணப் பரிமாற்றங்கள் அனைத்தும் பரிவர்த்தனை தோற்றவிக்கும் நபரின் துல்லியமான பொருத்தமான விவரங்களுடன் செய்யப்படவேண்டும். அவையாவன – பரிவர்த்தனையில் ஈடுபடும் நபரின் பெயர், முகவரி, கணக்கு வைத்து இருப்பின், அதன் எண், தனிநபர் அடையாள எண் (கணக்கு இல்லாதபட்சத்தில்) ஆகிய விவரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(b) உள்நாட்டில் ரூபாய் ஐம்பதாயிரம் மற்றும் அதற்கு அதிகமாக செய்யப்படும் தந்திவழிப் பணப்பரிமாற்றத்தில் அனுப்புநரின் பெயர், முகவரி, கணக்கு எண் ஆகியவை அனுப்பப்பட வேண்டும்.

(c) தந்திவழிப் பணப்பரிமாற்றத்தை வேண்டுமென்றே, ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும் குறைவாகக் காட்டி, தேவையான தகவல்களைத் தருவதை வாடிக்கையாளர் தவிர்க்கிறார் என்று தோன்றினால், அவரது அடையாளத்தைக் கண்டறிவது அவசியமாகும். அந்த வாடிக்கையாளர் இதில் ஒத்துழைக்க மறுத்தால், மேலும் முயற்சிகள் எடுத்து அவரின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். நிதியியல் புலனாய்வு அமைப்பு – இந்தியாவிற்கு சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனையாக அதைப் பதிவு செய்து அனுப்பிட வேண்டும்.

(d) தந்திவழிப் பணப்பரிமாற்றத்தை வேண்டிடும் வங்கி, அங்கிருந்து அனுப்பப்படும் தகுதிவாய்ந்த பணப்பரிமாற்றங்கள் குறித்த முழு தகவல்களையும் குறைந்தபட்சம் ஐந்தாண்டுகளுக்காவது பாதுகாத்து வைத்திடவேண்டும்.

(e) தொடர்புடைய பல தந்திவழிப் பணப்பரிமாற்றங்களை செயல்படுத்தும் வங்கி, உரிய வாடிக்கையாளர் மற்றும் இதர தகவல்களை அந்தந்தப் பணப்பரிமாற்றப் பரிவர்த்தனை விவரத்தோடு சேர்ந்து பாதுகாத்து வைத்திடவேண்டும்.

(f) அயல்நாட்டு தந்திவழிப் பணப்பரிமாற்றத்தில் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் இடையீட்டாளர் வங்கி, பரிமாற்றத்தை தோற்றுவித்த நபரின் முழுத் தகவலையும் அளிக்கவேண்டும். ஒருவேளை மேற்கொண்டு உள்நாட்டில் அவற்றைத் தொழில்நுட்ப குறைபாடுகளால் அனுப்பிட முடியாதபட்சத்தில், அத்தகவலை குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்காவது பாதுகாத்து வைத்திடவேண்டும்.

(g) சட்ட அமலாக்கப் பிரிவு /நீதித் துறை சார்ந்த அதிகாரிகள் கோரிடும்பட்சத்தில், தந்திவழிப் பணப்பரிமாற்றத்தை தோற்றுவித்தவர் குறித்த அனைத்து தகவல்களும் உடனடியாக அளிக்கப்படவேண்டும்.

(h) தந்திவழிப் பணப்பரிமாற்றங்களைத் தோற்றுவித்தவர் குறித்த தகவல்கள் முழுமையாக இல்லாதபட்சத்தில், அவற்றை நேரிடர் அடிப்படையில் அடையாளம் காணும் நடைமுறைகளைப் பயனாளி வங்கிகள் தம்வசம் கைக்கொண்டிருக்கவேண்டும்.

(i) தந்திவழிப் பணப்பரிமாற்றத்தை தோற்றுவித்த நபர் குறித்த முழுமையான தகவல்கள் இல்லாத பரிவர்த்தனைத் தகவலை பயனாளி வங்கி சந்தேகத்திற்குரிய பரிவர்த்தனையாக நிதியியல் புலனாய்வு அமைப்பு – இந்தியாவிற்குத் தெரிவிக்கவேண்டும்.

(j) பரிமாற்றத்தை வேண்டிடும் வங்கியிடமிருந்து பணத்தைச் செலுத்தியவர் குறித்த விவரங்களைப் பயனாளி வங்கி கோரிடும். அப்போது செலுத்தியவர் விவரங்களை வங்கி தர மறுத்தால், பயனாளி வங்கி பரிமாற்றத்தை வேண்டும் வங்கியுடனான வர்த்தகத் தொடர்பினை குறைக்கலாம் அல்லது முடித்துக் கொள்ளலாம்.

### 66. கேட்போலை போன்றவற்றை வெளியிடுதல் / பணம் அளித்தல்

ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமாக செய்யப்படும் பணப்பட்டுவாடா பரிமாற்றங்களில், (கேட்போலை, தந்திவழி, NEFT/IMPS) பயணியர் காசோலை போன்றவைகளை வெளியிடுதல் ஆகிய அனைத்தும், வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து பற்று வைத்து, காசோலை அளித்துச் செய்யப்படவேண்டும். பணம் பெற்றுக்கொண்டு இத்தகு வசதிகள் அளிக்கப்படக்கூடாது.

கேட்போலை, கொடுப்பாணை, வங்கியாளர் காசோலை ஆகியவற்றின் மீது அதை வாங்குபவரின் பெயரை வெளியிடும் வங்கி பதித்துத்தரவேண்டும். செப்டம்பர் 15, 2018-ற்குப் பின்னர் வெளியிடப்படும் இத்தகு உபகரணங்களில் இந்த அறிவுறுத்தல்கள் செயல்படுத்தப்படும்.

### 67. வருமானவரிக் கணக்கு எண் (PAN)அளித்தல்

வாடிக்கையாளரின் வருமான வரிக்கணக்கு எண் (PAN),வருமான வரி விதி எண் 114B-ன்படி, வங்கிப் பரிவர்த்தனைகள் நடைபெறுகையில் வங்கியால் பெறப்பட்டு சோதித்தறியப்படும். வருமானவரிக் கணக்கு எண் இல்லாதவர்களிடமிருந்து படிவம் எண் 60 பெற்றுக்கொள்ளப்படும்.

### 68. மூன்றாம் நபரின் பொருட்கள் விற்பனை

மூன்றாம் நபரின் முகவராகச் செயல்பட்டு அவர்தம் பொருட்களை விற்பனை செய்கையில், ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகள் இந்த வழிகாட்டுதலின் நோக்கத்திற்காக பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்திடும்.

(a) இந்த வழிகாட்டுதலின் பிரிவு 13 (e)-ல் குறிப்பிட்டுள்ளபடி, வந்துபோகும் வாடிக்கையாளரால் செய்யப்படும் பரிவர்த்தனைத் தொகை ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும் அதிகமானால், அவர் குறித்த விவரங்கள், அவரின் முகவரி, அடையாளம் சோதித்தறியப்படவேண்டும்.

(b) பகுதி VII, பிரிவு 46-ன்படி, மூன்றாம் நபரின் பொருட்களின் விற்பனை சார்ந்த பரிவர்த்தனை விவரங்கள் அவற்றின் பதிவேடுகள் பத்திரமாக பராமரிக்கப்படவேண்டும்.

(c) வாடிக்கையாளரின் (வந்துபோகும் வாடிக்கையாளர் உட்பட) மூன்றாம் நபர் பொருட்கள் விற்பனை தொடர்பான பரிவர்த்தனைகளை CTR / STR அறிக்கையின் பொருட்டு இனங்கண்டு, அலசி ஆராய்ந்து, எச்சரிக்கை உணர்வுடன் இருக்கவேண்டியவைகளைப் பிரித்துப்பார்க்க வகைசெய்யும் AML மென்பொருள் இருந்திடவேண்டும்.

(d) ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும், அதற்கும் அதிகமான தொகையில் செய்யப்படும் பரிவர்த்தனைகள் பின்வரும் வகையிலேயே ஏற்றுக்கொள்ளப்படும்.
- வாடிக்கையாளர் அளிக்கும் காசோலையின் பேரில் அல்லது அவர் கணக்கில் பற்று வைத்து –
- வாடிக்கையாளரின் (வந்துபோகும் வாடிக்கையாளர் உட்பட) வருமானவரிக் கணக்கு எண்ணைப் பெற்று, சோதித்தறியப் படவேண்டும்.

(e) ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்புகளின் சொந்தப் பொருட்கள் விற்பனை, கடன் அட்டை பாக்கிகளைக் கட்டுதல், முன்பணம் செலுத்தி அட்டைகள் பெறுதல், பயணியர்அட்டை ஆகிய அனைத்து வகை பரிவர்த்னைகள் ரூபாய் ஐம்பாதாயிரம் அதற்கும் அதிகமாக இருக்குமானால், மேலே (d)–ல் குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் இவற்றிற்கும் பொருந்தும்.

## 69. கூட்டுறவு வங்கிகள் – முகமதிப்பில் காசோலை வசதி

(a) வணிக வங்கிகள் "முகமதிப்பில் காசோலை" பட்டுவாடா வசதியை கூட்டுறவு வங்கிகளுக்கு அளிக்க முன்வரலாம். இத்தகு ஏற்பாடுகளால் எழக்கூடிய கடன் நேரிடர், நற்பெயர் நேரிடர் ஆகியவற்றை மதிப்பீடு செய்து, கூட்டுறவு வங்கிகளை கண்காணித்து செய்லபடவேண்டும்.

(b) வாடிக்கையாளராக விளங்கும் கூட்டுறவு வங்கிகள் / சொசைட்டிகள், நடப்பிலுள்ள KYC மற்றும் AML நடைமுறைகளைப் பின்பற்றி பூர்த்தி செய்கிறார்களா என்பதை உரிய பதிவேடுகளைச் சோதித்தறியும் உரிமை வணிக வங்கிகளுக்கு இருக்கவேண்டும்.

(c) கூட்டுறவு வங்கிகள் பின்வருமாறு செயல்படவேண்டும்.

(i) முகமதிப்பில் காசோலை வசதி பின்வரும் வகையில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்பதை வங்கிகள் உறுதி செய்துகொள்ளவேண்டும்.

(a) தங்களின் சொந்த உபயோகத்திற்காக மட்டும்.

(b) தங்களிடம் கணக்கு வைத்துள்ள KYC நிபந்தனைகளைப் பூர்த்தி செய்த வாடிக்கையாளர்களுக்காக மட்டும். அதுவும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும், அதற்கும் மேற்பட்ட மதிப்புடைய பரிவர்த்தனைகள் வாடிக்கையாளர்கள் கணக்கில் பற்று வைத்து மட்டுமே நடத்தப்படுகிறது.

(c) வந்துபோகும் வாடிக்கையாளரானால், ரொக்கத்தில் நடத்தப்படும் பரிவர்த்தனைகள் ஒரு நபருக்கு ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும் குறைவாக இருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படும்.

(ii) கீழ்க்கண்டவைகளைப் பராமரித்தல் –

(a) முகமதிப்பில் அளிக்கப்படும் காசோலைகள் பற்றிய விவரங்களின் பதிவேடு குறிப்பாக, விண்ணப்பதாரரின் பெயர், கணக்கு எண், பயனாளிகுறித்த தகவல்கள் மற்றும் அத்தகு காசோலை வரையப்பட்ட தேதி.

(b) முகமதிப்பில் வழங்கப்படும் காசோலை வசதி அளிக்கும் வங்கியிடம் இத்தகு உபகரணங்களின் (காசோலைகளின் ....) மதிப்பிற்கு ஈடாக, போதுமான அளவு இருப்பை அல்லது எடுக்கக்கூடிய ஏற்பாடுகளை கூட்டுறவு வங்கிகள் இதன் பொருட்டு செய்து வைத்திருக்கவேண்டும்.

(iii) காசோலைகளின் மதிப்பு எவ்வளவாக இருப்பினும் அவை “கணக்கில் கொடுக்கவும் ” (Account Payee) என்று கோடிடப்பட்டிருக்கவேண்டும்.

## 70. முன்னர்பணம் செலுத்தப்பட்ட உபகரணங்கள்

பட்டுவாடா மற்றும் தீர்வுத் துறை (PPIs) இந்திய ரிசர்வ் வங்கியின் தனது முக்கிய வழிகாட்டுதல்கள் வாயிலாக குறிப்பிடும் அறிவுறுத்தல்களை,PPI உபகரணங்களை வெளியிடுவோர் முற்றிலும் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

## 71. பணியாளர்கள் நியமனம் மற்றும் பயிற்சி

(a) பணியாளர்களைப் பணியமர்த்தும்போது, அவர்கள் குறித்த விவரங்களைச் சீராக சோதித்தறிய சிறந்த பணியமர்வு நடவடிக்கை முறைமைகள் தேவை.

(b) AML / CFT கொள்கை குறித்த நடைமுறைகளை நன்கு அறிந்து செயல்படும் வகையில் தொடர் பயிற்சித் திட்டங்கள் இருக்கவேண்டும். அலுவலக முகப்பிலிருப்போர், நிபந்தனைகளை நிறைவேற்றும் பொறுப்பிலிருப்போர், புதிய வாடிக்கையாளரை எதிர்கொள்வோர் என்று வகைக்கேற்ப பயிற்சித் திட்டம் அமைக்கப்பட வேண்டும். அலுவலக முகப்பிலிருப்பவர்கள் வாடிக்கையாளர்களுக்கு விவரங்கள், தகவல்கள் அளித்து அறிவூட்டுபவர்களாக இருக்கவேண்டும். இது குறித்துப் போதிய தெளிவில்லாத வாடிக்கையாளர்களால் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். தணிக்கைப் பிரிவிலிருக்கும் பணியாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பின் AML / CFT கொள்கைகளை நன்கு அறிந்தவர்களாகவும், நெறிமுறை சார்ந்து எழும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும்படியாக அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டும். இது உறுதிசெய்யப்படவேண்டும்.

## 72. NBFCs / RNBCs ஆகியோர், தரகர் / முகவர் பின்பற்றவேண்டிய KYC வழிகாட்டுதல்கள்

(a) வங்கிசாரா நிதிநிறுவனங்கள் / வரையறுக்கப்பட்ட வங்கிசாரா நிதி நிறுவனங்கள் சார்பில் டெபாசிட்டுகள் சேகரிக்கும் பணியில் ஈடுபட அதிகாரமளிக்கப்பட்டோர், தரகர் / முகவர் அனைவரும் NBFC / RNBC உரிய KYC வழிகாட்டுதல்களுக்கு முழுமையாக உட்படுத்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

(b) KYC வழிகாட்டுதல்களின் நிபந்தனைகளைச் சரிபார்க்கும் பொருட்டு, அனைத்து விவரங்களும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் அளிக்கப்படவேண்டும். NBFC / RNBC-க்கள் சார்பில் இயங்குவோர், தரகர் / முகவர் ஆகியோர் KYC நடைமுறை நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யத்தவறினால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கும் NBFC/RNBC-க்கள் பொறுப்பேற்கவேண்டும்.

(c) இத்தகு நிறுவனங்களின் சார்பில் இயங்குவோர், தரகர், முகவர் ஆகியோருடனான தரகு, கமிஷன் தொடர்புடைய கணக்கு வழக்குப் புத்தகங்கள் தேவைப்படும்போதெல்லாம், தணிக்கை மற்றும் ஆய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## அத்தியாயம்–XI
## ரத்து செய்தல்

73. இந்த வழிகாட்டுதல்களை வெளியிடுவதால், **<u>பின் இணைப்பில்</u>** கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் / வழிகாட்டுதல்கள் சுற்றறிக்கைகள் ரத்து செய்யப்படுகின்றன.

74. மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின்படி வழங்கப்பட்ட அனைத்து அனுமதிகள் / அங்கீகாரங்கள் இந்த வழிகாட்டுதலின்படி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

75. இந்த வழிகாட்டுதல்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக, ஏனைய ரத்து செய்யப்பட்ட சுற்றறிக்கைகள் நடைமுறையில் இருந்ததாகக் கருதப்படும்.

**பின்னிணைப்பு –I**

**கோப்பு எண் 14014/01/2019/CFT**

**இந்திய அரசாங்கம்**

**உள்துறை அமைச்சகம்**

**CTCR பிரிவு**

**புதுதில்லி, தேதி மார்ச் 14, 2019**

**ஆணை**

**பொருள் – சட்டவிரோத (தடுப்புச்) சட்டம் (UAPA)1967-ன் பிரிவு எண் 51A–ஐ அமல்படுத்துவதற்கு உரிய நடைமுறைகள்**

சட்டவிரோத நடநவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் 1967 (UAPA) திருத்தியமைக்கப்பட்டு 31.12.2008 அன்று அறிவிக்கப்பட்டது. குறிப்பாக பிரிவு எண் 51A சட்டத்திற்குள் புகுத்தப்பட்டது. அது பின்வருமாறு:

"51Aதீவிரவாத (வன்முறை) நடவடிக்கைகளைத் தடுக்கவும், அவற்றை எதிர்கொள்ளவும், மைய அரசாங்கத்திற்கு பின்வரும் அதிகாரங்கள் உண்டு.

(a) தீவிரவாதத்தில் ஈடுபடுகிற அல்லது ஈடுபட்டுள்ளார் என்கின்ற சந்தேகத்திற்குரிய எந்த ஒரு நபர் இந்த ஆணையின் பட்டியலில் பெயர் கொடுக்கப்பட்டுள்ள தனிநபர்கள், அமைப்புகளின் வசம் உள்ள அல்லது அவர்களின் சார்பில் அல்லது அவர்களின் உத்தரவின் பேரில் இயங்குகின்றவர்களின் நிதியியல் சொத்துகள், பொருளாதார வள ஆதாரங்கள் எதையும், முடக்கவும், நிறுத்தவும், அதிகாரம் உண்டு.

(b) தீவிரவாதத்தில் ஈடுபடுகிற அல்லது ஈடுபட்டுள்ளார் என்கின்ற சந்தேகத்திற்குரிய நபர் இந்த ஆணையின் பட்டியலில் பெயர் கொடுக்கப்பட்டுள்ள தனிநபர்கள், அமைப்புகள் இவற்றிற்கு பயன்படும் வகையில் நிதி, நிதிச்சொத்து அல்லது பொருளாதார வள ஆதாரங்களை அளித்திட முனையும் எந்த ஒரு தனி நபர் அமைப்பினையும் தடுத்திட அதிகாரம் உண்டு.

(c) ஆணையின் பட்டியலில் பெயர் கொடுக்கப்பட்டுள்ள நபர்கள் அல்லது தீவிரவாதத்தில் ஈடுபடுவோர் அல்லது ஈடுபட்டுள்ளார் என்ற சந்தேகத்திற்குரிய நபர்கள் இந்தியாவில் நுழைந்திடவோ அல்லது இந்தியாவிற்குள் வந்து வேறிடம் மாறிச் செல்லவோ அனுமதி மறுத்தல், தடுத்தல் ஆகியவற்றிற்கு அதிகாரம் உண்டு."

சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் (UAPA) 1967 -ஆணை என்பதை பின்வருமாறு விளக்குகிறது –

தீவரவாதத் தடுப்பு மற்றும் குறைப்பு (பாதுகாப்பு அமைப்பின் தீரமானங்களை நிறைவேற்றுதல்) ஆணை 2007 என்று இது பொருள்படும். இது அவ்வப்போது திருத்தியமைக்கப்படும்.சட்டப் பிரிவு 51A-ன் ஷரத்துக்களை விரைவாகவும் திறன்படவும் அமலாக்கம் செய்திட ஒரு செயல்முறை, இந்த அமைச்சகத்தின் ஆணை எண் 17015/10/2002-IS-VI(தேதி 27.8.2009) மூலமாக உருவாக்கப்பட்டு, வெளியிடப்பட்டது. உள்துறை அமைச்சகத்தின் பிரிவுகளை மறுசீரமைப்பு செய்யப்பட்டபின், (UAPA) சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம் 1967-ன் நிர்வாகம் மற்றும் தீவிரவாதத்திற்கு நிதி ஆதரவுகளைத் தடுக்கும் பொறுப்பு CTCR பிரிவிற்கு ஒதுக்கப்பட்டது. அதன்படி, 27.8.2009 தேதியிட்ட ஆணை கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டது.

**UAPA தொடர்பு அதிகாரிகள் நியமனம் மற்றும் அதன் விவரங்களின் தொடர்புத் தகவல்**

2. மேற்குறிப்பிட்டதன் விவரங்கள் பின்வருமாறு –

i. இணைச்செயலர் (CTCR) உள்துறை அமைச்சகம் UAPA-ன் தொடர்பு அதிகாரியாவார். அவரின் தொடர்புக்கு 011-23092736 (தொலைபேசி) 011-23092569 (Fax) jsctcr-mha@gov.in (e-mail id).

ii. அயல்நாட்டு விவகார அமைச்சகம், பொருளாதார விவகாரத் துறை, உள்துறை அமைச்சகத்தின் அமலாக்கப் பிரிவு, நிதியியல் புலனாய்வு அமைப்பு, செபி, காப்பீட்டு நெறிமுறை மேம்பாட்டு அதிகாரி (நெறிமுறையாளர்கள் என்று இனி இங்கே குறிப்பிடப்படுவர்) ஆகியோர் UAPA-க்கான தொடர்பு அதிகாரியை நியமித்து, அவரின் பெயர், தொடர்பு விவரங்களை உள்துறை அமைச்சகத்தின் CTCR பிரிவிற்குத் தெரியப்படுத்தவேண்டும்.

iii. மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் உள்துறையின் முதன்மைச் செயலர் / செயலர் நிலையில் உள்ள அதிகாரியை UAPA-ன் தொடர்பு அதிகாரியாக நியமித்து அவரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்களை உள்துறை அமைச்சகத்தின் CTCR பிரிவிற்குத் தெரிவிக்கவேண்டும்.

iv. உள்துறை அமைச்சகத்தின் CTCR பிரிவு எல்லா UAPA தொடர்பு அதிகாரிகளின் பெயர் மற்றும் விவரங்கள் கொண்ட தொகுப்புப் பட்டியலைத் தயாரித்து, அதை அனைத்து UAPA தொடர்பு அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்திடும்.

v. இந்திய ரிசர்வ் வங்கி, செபி (பங்குப் பரிவர்த்தனை வாரியம்) காப்பீடு நெறிமுறை மேம்பாட்டு அதிகாரி ஆகியோர் முறையே வங்கிகள், பங்கு பரிவர்த்தனை நிலையங்கள் / செபியால் நெறிப்படுத்தப்படும் இடையீட்டாளர்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கு UAPA-ன் தொடர்பு அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை அனுப்பி வைத்திடவேண்டும்.

vi. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம், மற்றும் ஒவ்வொரு மாற்றத்தின்போதும் தொகுக்கப்பட்ட UAPA-ன் தொடர்பு அதிகாரிகளின் பெயர்ப்பட்டியலை உள்துறை அமைச்சகத்தின் CTCR பிரிவின் தொடர்பு அதிகாரி சுற்றறிக்கையாக வெளியிடுவார். மேலும் இந்தப் பட்டியல், அயல்நாட்டு விவகார அமைச்சகம், பொருளாதார விவகாரத்துறை, உள்துறை அமைச்சகத்தின் அயல்நாட்டினர் பிரிவு, இந்திய ரிசர்வ் வங்கி, செபி, காப்பீட்டு நெறிமுறை மற்றும் மேம்பாட்டுக் கழகம், நிதியியல் புலனாய்வு அமைப்பு – இந்தியாவிற்கு பட்டியல் அனுப்பப் படவேண்டும்.

**குறிப்பிடப்பட்ட தனிநபர்கள் / அமைப்புகளின் பெயர்ப் பட்டியல் – தொடர்புத் தகவல்**

3. குறிப்பிடப்பட்ட தனிநபர்கள் / அமைப்புகளின் பெயர்ப் பட்டியலைத் தகவலாக அளித்தல் என்பதைப் பொறுத்தவரை பின்வரும் நடைமுறை பின்பற்றப்படும்.

